# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,910—1970 ජූනි 11 වැනි බ්‍රහස්පතින්දා—1970.6.11

14,910 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு யூன் மாதம் 11 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்யக்கூடியதாக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் | 497 | ஏலவிற்பனையும், குத்தகை விற்பனையும் | 512 |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 503 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 506 | அந்நிய முடிவகை உத்தரவும் சீட்டு விண்ணப்பங்கள் | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | 511 | ஏல விற்பனைகள் | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | 511 | நானாவித அறிவித்தல்கள் | — |


### பதவிகள் — வெற்றிடம்

**" இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள் "**

1. படிகள்—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

2. சேவைக்குரிய நிபந்தனைகள்—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கரும முறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

3. நியமன விதிகள்.—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக் குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சதவீதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச் சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்தீவின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு 'நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின்' தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றுண்டாகும்.

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்களை ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1969 ம் ஆண்டு திசெம்பர் மீ 14 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அச்சுத்தலைவர்.

*(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல்வேண்டும்.*

*(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.*

*(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் பிறவற்றுடன் க.ப.த.ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சி சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்து அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.*

*குறிப்பு—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்கப் பெறுவர்.*

*5. வேண்டிய தகைமைகள்— விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*6. யுத்தசேவைச் சலுகை—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், நியமனக்கும் படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளை விட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.*

*7. பிற தேவைகள்—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப் பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந் நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோ வெனவுங் கூறல் வேண்டும்.*

*(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.*

*(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.*

*(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டு பிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப் பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப் படுவர்.*

*(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

*8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது.*

---

இல. : AA 47/X 2246/70

## உள்ளூராட்சி அமைச்சின் நாடு, நகர நிர்மாணப் பிரிவு

### கனிஷ்ட உதவிக் கட்டிடக் கலைஞர் பதவி

*உள்ளூராட்சி அமைச்சின் நாடு, நகர நிருமாணப் பிரிவில் கனிஷ்ட உதவிக் கட்டிடக் கலைஞர் பதவிக்கு விண்ணபபங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இவ்வலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களிற் தயாரிக்கப்பட்டு, செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு, அஞ்சற் பெட்டி இல. 500, கொழும்பு—1 என்ற முகவரியில் பின்வரும் திகதியில அல்லது அதற்குமுன் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்க வேண்டும்.*

(அ) *உள்நாட்டு விண்ணப்பங்கள் :* 1970.6.25.
(ஆ) *வெளிநாட்டு விண்ணப்பங்கள் :* 1970.7.2.

குறிப்பு :

(1) *அச்சிட்ட விண்ணப்பப்படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்வோர் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரை இடப்படாததுமான ஓர் கடித உறையில் தமது சொந்த முகவரியை எழுதிக் கடிதத்துடன் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பிக்கும் அபேட்சகர் அரசாங்க சேவையில் உள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.*

(2) *விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலிற் தவறிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டெதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்புடையவராவர்.*

(3) *வெளிநாட்டில் உள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிற நாடுகளிலுள்ள இலங்கை அரசாஙகப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக்கொள்ளலாம். அபேட்சகர்கள் விரும்பினால் படிவங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள் அவர்கள் வசிக்கும் நாட்டிற்குரிய அல்லது அந்நாட்டிற்குக் கிட்டவுள்ள இலஙகைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு இலங்கை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பும்பொருட்டு அனுப்பிவைக்கலாம்.*

(4) **மருத்துவப் பரிசோதனையும் பயணச் செலவும் :** *இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை அலுவலாளர்கள் சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடையவர்களா என்பதை உறுதிப்படுத்தும் கருத்துடன் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பரிசோதனைக்குச் செல்லுமாறு வேண்டப்படுவர். அத்தகைய மருத்துவச் சோதனைக்குரிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்குரிய செலவையும் சம்பந்தப்பட்ட அலுவலாளரே கொடுத்தல் வேண்டும்.*

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும் :** பதவி நிரந்தர மானதும் உபகாரச் சம்பளம் அற்றதுமாகும். தெரிவுசெய்யப்பட்ட அபேட்சகர் அரசாங்க சேவைச் சகாயநிதிக்கு உதவுதொகை செலுத்தல் வேண்டும். நியமனம் முதற்கண் மூன்று வருட காலத்திற்கு பரீட் சார்த்த நிலையில் அமையும்.

3. **சம்பளமும் படிகளும் :** இப்பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு :—

ஆண்டிற்கு ரூபா 6,720 ஆகத் தொடங்கி ஆண்டிற்கு ரூபா 8,880 வரை செல்லும். ஆண்டிற்கு ரூபா 360 முறையில் 6 சம்பள உயர்வுகள் உண்டு.

4. **வேண்டிய தகைமைகள் :** ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளை உடையார் என்பதற்குத் திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும் :

(அ) சிறந்த நற்குணம் உடையவராயும், உடல் நலம் உடையவராயும் இருத்தல் வேண்டும்.

(ஆ) 1970.6.25 ஆம் திகதியில் 22 வயதிற்குட்படாதவராயும் 35 வயதிற்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும். ஏற்கெனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு மேல் வயதெல்லை கணிக்கப்படமாட்டாது.

(இ) பிரிட்டிஷ் கட்டிடக் கலைஞர் அரச நிறுவனத்தின் நடுத்தரப் பரீட்சையில் சித்திபடைந்திருத்தல் வேண்டும் அல்லது வேறு ஏதாவது நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சையில் விதி விலக்களிப்பதற்கான சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதையேனும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கப்படும்பொழுது அவைகளைச் சமர்ப் பித்தல் வேண்டும் :

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**முக்கிய குறிப்பு :** சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடைபெறும் பாடசாலைக் குரிய பிரமாணத்தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது).

(ஆ) பல்கலைக்கழகப் பட்டம் அல்லது உயர்ந்த கல்விச்சான்றிதழ்.

(இ) பண்புச்சான்றிதழ் இரண்டு. அவற்றில் ஒன்று பாடசாலைப் பணிப் பாளர், கலலூரி அதிபர் அல்லது பேராசிரியரிடம் இருந்து பெற்றதாக இருத்தல் வேண்டும்.

(ஈ) உயர்தொழிற்றகைமையும் தொழில் நுட்பத்தகைமை பற்றிய சான்றிதழ்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச்சான்றிதழ்.

குறிப்பு : (1) சாதனங்களாயினும் அல்லது சாதனங்களின் பிரதிகளையா யினும் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்கப்படும்பொழுது அவற் றைச் சமர்ப்பிக்கத்தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங் கள் கவனிக்கப்படமாட்டாது.

6. அரசாங்க சேவையில் உள்ள அலுவலாளர்கள் தங்கள் விண்ணப் பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு நேராக அவர்கள் அறிவிக்க வேண்டும். அந்த அறிவித்தல் விண்ணப்பப்பகடைசித் திகதியன்று அல்லது அதற்குமுன் செயலாளரை அடையக் கூடியதாக அனுப்பப் படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப் படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) இதன்பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத்தொடர்பு களையும் செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு, என முகவரியிட்டு அனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்தில் உள்ள எந்த அலுவலா ளருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் முதலாம் பாகம் இரண்டாம் பிரிவில் வெளியிடப்பட்டிருப்பதைப் பார்க்கவும்.

9. விண்ணப்பப்படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட் டையை ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அதன் பிரகாரம் அறிவுறுத் தப்பட்டுள்ளவாறு விண்ணப்பதாரர் நிரப்பித் திருப்பி அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பம் பெற்றமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமைபற்றிய அறிவித்தலைப் பெறுகிடின் உடனே அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத்தவறும் விண்ணப்பதாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரிய,
செயலாளர்,
அரசாங்கசேவை ஆணைக்குழு.

அரசாங்கசேவை ஆணைக்குழுவின் அலுவலகம்,
காலிமுகச் செயலகம்,
அ. பெ. இல. : 500,
கொழும்பு–1,
1970.6.5.

6–276—11.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,910

---

இல. வெ. மூ./2/216

## கல்வி அமைச்சு

### இத்தாலி தேசத்தில் 1970 ஆம் ஆண்டு செல்லுபடியான பொரு ளாதார அபிவிருத்திப் புலமைப் பரிசில்கள்

நேப்பிள்ளிலுள்ள பொருளாதார அபிவிருத்திச் கற்கை நிலையத்தில் (ISVE) பொருளாதார அபிவிருத்திக் கற்கைக்கு இத்தாலி அரசாங்கத் தால் வழங்கப்படும் புலமைப் பரிசில்களை அளித்தற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பொருளாதார அபிவிருத்தி சார்புள்ள நிலைமை களையும் சூழல்களையும் கையாளக்கூடிய முறையில் தனியார் துறைக்கும் அரசினர் துறைக்கும் தேவையான நிர்வாகஸ்தர்களுக்கு கற்கை, ஆராய்ச்சி, செயல்முறை வேலை ஆகியவை மூலம் பயிற்சி அளித்து தகைமை அடையச் செய்தலே இப்புலமைப் பரிசில் நோக்காகக் கொண்டுளது.

தமது பயிற்சி நெறியை பூர்த்தி செய்துகொண்டு திரும்பி வந்தபின் இந்நாட்டின் முன்னேற்றத்துக்குக் குறிப்பிடத்தக்க பணி செய்யக்கூடிய வரெனக் கருதப்படும் நல் நுண்ணறிவு ஆற்றல் உடையவர்களுக்கே இப்புலமைப் பரிசில்கள் வகுக்கப்பட்டுள்ளன.

குறிப்பு 1.—புலமைப் பரிசிலால் ஏற்பாடு செய்யப்படும் பயிற்சி ஒரு திட்டம் தொடர்பாக அத்தியாவசியமென அவர் கடமை புரியும் திணைக் களத் தலைவர் 16.5.60 ந் திகதிய 514 ம் இலக்கத் திறைசேரிச் சுற்று நிருபத்துக்கிணங்க அத்தாட்சிப்படுத்தி அச்சுற்றுநிருபத்தில் கேட்டுள்ள பிரகாரம் திட்டம் பற்றிய விபரங்கள் கொடுபட்டாலன்றி எவ் அரசாங்க ஊழியரினது விண்ணப்பமும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

குறிப்பு 2.—சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக்கழகங்கள், அர சாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் இத்த கைய நிலையங்கள் ஆகியவற்றில் கடமை புரிபவர்களின் விண்ணப்பங்கள் உரிய நிலையத் தலைவர் மூலம் அனுப்பப்பட வேண்டும். படிவத்தின் 27 ம் கூட்டை பூரணப்படுத்தி விண்ணப்பத்தை அனுப்பி வைக்கும்படி சம்பந்தப்பட்ட தலைவர் கேட்கப்பட வேண்டும்.

2. **கால எல்லை.**—புலமைப் பரிசில்களின் கால எல்லை சாதாரணமாக 1970 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 1 ஆந் திகதி தொடக்கம் ஆறு மாத கால அளவினதாகும்.

எனினும் துர்நடத்தை, வரவில் ஒழுங்கீனம், சம்பந்தப்பட்ட அதிகாரி களின் அனுமதியின்றி கல்லூரியில் அல்லது விடுதிச்சாலையில் இல்லாமை, படிப்பில் திருப்தியற்ற முன்னேற்றம், பரீட்சைகளின் சித்தியடையத் தவறுதல் போன்ற காரணங்களையிட்டு இத்தாலிய அதிகாரிகளினை தற்று ணிபுக் கேற்ப புலமைப் பரிசில்கள் பயிற்சி நெறிக் காலத்தின் போது எந்நேரத்திலேனும் நிறுத்தப்படலாம். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில் புலமைப் பரிசு பெற்றவர் தனது சொந்தச் செலவிலேயே இலங்கைக்குத் திரும்பிச் செல்லும்படி வேண்டப்படலாம்.

3. **தகவுத்திறன்.**—அபேட்சகர்கள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

(i) இலங்கைப் பிரசைகளாக இருக்க வேண்டும்.

(ii) 1.12.70 அன்று 45 வயதுக்குக் குறைந்தவராய் இருக்க வேண்டும்.

(iii) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பலகலைக் கழகத்தால் வழங்கப்படும் பொருளாதார (விசேட) பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

(iv) ஆங்கிலத்தில் சிறந்த தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

(v) (அ) அரசாங்க அல்லது தனியார் துறையில் பொருளாதார அபிவிருத்தி முயற்சி யாதேனிலும் நிர்வாகஸ்தராக 1.12.70 அளவில் குறைந்தபட்சம் 3 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

**அல்லது**

(ஆ) பல்கலைக் கழகம் அல்லது வேறு யாதேனும் தாபனத்தில் ஆசிரியாக அல்லது விரிவுரையாளராக 1.12.70 அளவில் குறைந்த பட்சம் 3 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

குறிப்பு 1.—அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு சபையில் அல்லது கூட்டுத் தாபனத்தில் அல்லது பல்கலைக் கழகத்தில் அல்லது அரசாங்க உதவி பெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் ஒரு நிலையத்தில்

விதிக்கப்பட்டுள்ள ஒரு காலத்துக்கு சேவை புரிவதாக ஒரு உடன்படிக்கை அல்லது முறி செய்துள்ள ஓர் அபேட்சகர் அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் விதிக்கப்பட்டுள்ள காலத்தைப் பூர்த்தி செய்து அவ்வுடன்படிக் கையில் அல்லது முறியில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைப்பாடுகளை 1.12.70 அளவில் நிறைவேற்றி இருந்தாலன்றி விண்ணப்பித்தலாகாது.

**குறிப்பு 2.**—தற்காலிக நியமனங்களை வகிக்கும் அரசாங்க ஊழியர் களும் நிரந்தர நியமனங்களை வகிக்கும், ஆனால் நியமனங்களில் உறுதிப் படுத்தப்படாதவர்களான அரசாங்க ஊழியர்களும் தங்கள் பதவிகளைத் துறப்பதற்கு சம்மதமாயிருந்தாலன்றி இவற்றுக்கு விண்ணப்பித்தற்கு உரித்துடையராகார். படிவத்தின் 15 (ஈ) ம் கூட்டில் அத்தகைய விருப்பம் தெரிவிக்கப்படல் வேண்டும்.

4. **அளிப்பு நிபந்தனைகள்.**—இப்புலமைப் பரிசில்கள் கீழ்க்காணும் நயங்கள் உடையனவாய் இருக்கும்—

(அ) இத்தாலிக்குப் போய்திரும்புதற்கான பிரயாணச் செலவுகள்.

(ஆ) பதிவுக் கட்டணம் (30,000 லயர்)

(இ) சமூகக் காப்புறுதி (12,000 லயர்)

(ஈ) கற்கை

(உ) பாடப் புத்தகங்களுக்கான ஒரு சகாயப்படி

(ஊ) மாதாந்தச் சகாயப்படியாக 90,000 லயர் (1 லயர்—.0095 சதம் ஏறக்குறைய).

**குறிப்பு.**—புலமைப் பரிசில் பெறுவோர் 1971 ஆம் ஆண்டு மே மாதத்துக்கான தமது சகாயப்படியில் 50,000 லயருக்கு மேற்படாத ஒரு கட்டணத்தை, பயிற்சி நெறி முடிவில் ISVE நிலையத்தால் இத்தாலிய தேசத்தில் ஒழுங்கு செய்யப்படும் கற்கைச் சுற்றுலாப் பிரயாணச் செலவு களின் பொருட்டு செலுத்த வேண்டும்.

**குறிப்பு.**—இப்புலமைப் பரிசில்களுக்குத் தெரிவு செய்யப்படும் அர சாங்க ஊழியர்களுக்கு லீவு வழங்குதல், காலத்துக்குரிய திறைசேரி விதிகளுக்கும் வித்தியா பகுதி விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் அமையும்.

5. **நேர்முகப் பரீட்சை.**—தகவுடைய அபேட்சகர்கள் கொழும்பில், விதிக்கப்படும் நேரத்திலும் இடத்திலும் ஒரு நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமளிக்க வேண்டும். இந்நேர்முகப் பரீட்சை தொடர்பில் பிரயாணச் செலவேனும் வேறு எவ்வித செலவேனும் கொடுபடாது. இந்நேர் முகப் பரீட்சையின் போது தராதரப் பத்திரங்கள் பிறப்புச் சாட்சிப் பத் திரம், தமது உரிமையை அத்தாட்சிப் படுத்தும் சான்றுகள் ஆகிய வற்றின் மூலங்களையும் சமர்ப்பிக்கக்கூடியவராய் இருக்க வேண்டும்.

6. **உடன்படிக்கை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள், இத்தாலிக் குச் செல்லுமுன் பின்வரும் முறையில் இலங்கை அரசாங்கத்துடன் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும்—

(அ) ஏனைய விடயங்களுடன், விதிக்கப்படும் கற்கை நெறியை விசுவாச மாகவும் விவேகமாகவும் பின்பற்றி திருப்திகரமாகப் பூர்த்தி செய்வதாகவும் வேண்டப்படுமிடத்து, பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தபின் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு (அரசாங்கத்தால் இது தீர்மானிக்கப்பட வேண்டியது) இலங்கை அரசாங்கத்தின் கீழ் சேவை புரிவதாகவும் ;

(ஆ) உடன்படிக்கையின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய ஒழுகத் தவறுமிடத்து புலமைப் பரிசின் முழுச் செலவையும் (அதாவது புலமைப் பரிசு தொடர்பாக இலங்கை அரசாங்கத்துக் கும் அதனை வழங்கும் முகவராண்மைக்கும் ஏற்படும் முழுச் செலவையும்—அரசினர் ஊழியர்களைப் பொறுத்தவரையில் சம் பளங்கள், சகாயப்படிகள் ஆகியன உட்பட) இலங்கை அரசாங் கத்துக்கு திருப்பிக் கொடுப்பதாகவும்.

7. **வைத்திய பரீட்சை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் இத்தாலி யில் கற்கை நெறி ஒன்றினை மேற்கொள்தற்கு வேண்டிய உடல்நலன், மனநலன் உடையவரா என பரீட்சித்தற்கு அரசாங்கத்தால் நியமிக்கப் படும் ஒரு விசேட வைத்தியர் சபையினால் நடாத்தப்படும் வைத்திய பரீட்சையில் தேற வேண்டும்.

8. உத்தேச கற்கை நெறியைப் பின்பற்றுவதால் பயிற்சியாளர்கள் கூடிய சம்பளங்களுக்கேனும் பதவி உயர்ச்சி வாய்ப்புகளுக்கேனும் உரித்துடையராகார்.

9. விண்ணப்பத்தில் கொடுபடும் விபரம் யாதேனும் பிழையெனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்ற வராக்கப்படுதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னராயின் அளிப்பு மீழ்க் கப்படுதற்கும் விண்ணப்பதாரி பாத்திரராவார்.

10. தெரிவில் தேறிய அபேட்சகர் ஒருவர், தெரிவு செய்யப்பட்ட பின் தெரிவை அல்லது அளிப்பை ஏற்க மறுப்பின், இரண்டு வருட காலத் துக்கு வேறு புலமைப் பரிசில்களைப் பெறும் வாய்ப்பிலிருந்து தடுக்கப்படு வார்.

11. நியமனங்கள் முகவராண்மைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின் அவைகளை ஏற்றுக் கொள்தல் அளிப்பை வழங்கும் முகவராண் மையின் தற்றுணிபையே பொறுத்த தாகையால் இலங்கை அதிகாரி களின் நியமனமே அளிப்பாகுமெனக் கருதப்படலாகாதென விண்ணப் பதாரிகள் திட்டவட்டமாக அறிந்துகொள்ள வேண்டும்.

12. ஓர் அபேட்சகரின் தெரிவுக்கு எம்முறையிலேனும் ஆதரவு வேண்டல் அல்லது செல்வாக்குப் பிரயோகித்தற்கு எத்தனித்தல் அத்தகைய அபேட்சகரைத் தகுதியற்றவராக்கும்.

13. இவ்விளம்பரத்தின் தேவைகளுக்கும் விண்ணப்பப் படிவத்தில் அச்சிடப்பட்டுள்ள அறிவுறுத்துரைகளுக்கும் சகல வகைகளிலும் அமை யாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

14. இவ்வலுவலகத்திலிருந்து பெறற்பாலனவாகிய விசேட படிவத் தில் தயாரிக்கப்பட வேண்டிய விண்ணப்பங்கள் 1970 ம் ஆண்டு யூன் மாதம் 25 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய தாக கொழும்பு 2 மலாய் வீதியிலுள்ள கல்வி, அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அனுப்பப்பட வேண்டும். உரிய திகதிக்குப் பின் அபற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

15. ஒவ்வொரு விண்ணப்பம் தொடர்பினும் ரூ. 10 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் முதற் பக்கத் தில் அந்நோக்கத்துக்கான இடத்தில் ரூ. 10 பெறுமதியான முத்திரை கள் ஒட்டப்பட்டு விண்ணப்பதாரியின் கையொப்பத்தால் அழிக்கப்பட வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் முத்திரைக் கட்டணம் திருப்பிக் கொடு படமாட்டாது.

16. ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய பகுதித் தலைவர் மூலம் அனுப்புதல் வேண்டும். சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக் கழகங்கள், அரசாங்க உதவி பெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் நிலையங்களிலுள்ள விண்ணப்பதாரிகள் உரிய நிலையத் தலைவர் மூலம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரி தனது பதவியிலிருந்து விலகச் சம்மதிக்குமிடத்தும் இத்தேவை அமையும். கல்வி, அமைச்சிலுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை உரிய பிரதேச வித்தியாதி பதி மூலம் அனுப்புதல் வேண்டும்.

17. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக் கொள்ளப்பட்டமை பற்றி விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படு வார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள் ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் பெறத்தவறும் விண்ணப்பதாரிகள் கல்வி, கலாச்சார அலுவலகல் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அதுபற்றி உடனே அறிவிக்க வேண்டும். அங்ஙனம் செய்யத்தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர் தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
3.6.1970.

6–212—11.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,910

---

இல : வெ மு/4/98

## கல்வி அமைச்சு

### பாகிஸ்தான் அரசாங்க கலாச்சார புலமைப்பரிசில்கள், 1970/71

பாக்கிஸ்தான் அரசாங்கத்தின் 1970/71 ஆம் ஆண்டுக்கான கலாச்சார புலமைப் பரிசில்கள் திட்டத்தின் கீழ் எந்திரவியலிலான பட்டப்பின் அல்லது பட்டமுன் கற்கைக்கு பாக்கிஸ்தான் அரசாங்கத்தால் வழங்கப் படும் புலமைப் பரிசில்களை அளித்தற்கு விண்ணப்பங்கள் கோரப்படு கின்றன.

தமது பயிற்சி நெறியை பூர்த்தி செய்துகொண்டு திரும்பி வந்தபின் இந்நாட்டின் முன்னேற்றத்துக்குக் குறிப்பிடத்தக்க பணி செய்யக்கூடியவ ரெனக் கருதப்படும் நல் நுண்ணறிவு ஆற்றல் உடையவர்களுக்கே இப்புலமைப் பரிசில்கள் வகுக்கப்பட்டுள்ளன.

**குறிப்பு 1.**—புலமைப் பரிசிலால் ஏற்பாடு செய்யப்படும் பயிற்சி ஒரு திட்டம் தொடர்பாக அத்தியாவசியமென அவர் கடமை புரியும் திணைக்களத் தலைவர் 16.5.60 ந் திகதிய 514 ம் இலக்கத் திறைசேரிச் சுற்று நிருபத்துக்கிணங்க அத்தாட்சிப் படுத்தி அச்சுற்றுநிருபத்தில் கேட்டுள்ள பிரகாரம் திட்டம் பற்றிய விபரங்கள் கொடுபட்டாலன்றி எவ் அரசாங்க ஊழியரினது விண்ணப்பமும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

**குறிப்பு 2.**—சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக்கழகங்கள், அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் இத்தகைய நிலையங்கள் ஆகியவற்றில் கடமை புரிபவர்களின் விண்ணப்பங்கள் உரிய நிலையத் தலைவர் மூலம் அனுப்

பப்பட வேண்டும். படிவத்தின் 27 ம் கூட்டை பூரணப்படுத்தி விண்ணப்பத்தை அனுப்பி வைக்கும்படி சம்பந்தப்பட்ட தலைவர் கேட்கப்பட வேண்டும்.

**குறிப்பு 3.**—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் ஒரு விண்ணப்பமே அனுப்புவதுடன் ஒரு கற்கை நெறிக்கே விண்ணப்பிக்க வேண்டும்.

2. **கால எல்லை :** புலமைப் பரிசில்களின் கால எல்லை தெரிவு செய்யப்படும் பயிற்சி நெறியைப் பொறுத்ததாகும். பட்டப்பின் புலமைப் பரிசில்கள் சாதாரணமாக 2 வருட கால அளவினதாகவும் பட்டமுன் புலமைப் பரிசில்கள் 4–6 வருட கால அளவினதாகவும் அமையும். எனினும் துர்நடத்தை, வரவில் ஒழுங்கீனம், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அனுமதியின்றி கல்லூரியில் அல்லது விடுதிச்சாலையில் இல்லாமை, படிப்பில் திருப்தியற்ற முன்னேற்றம், பரீட்சைகளில் சித்தியடையத் தவறுதல் போன்ற காரணங்களையிட்டு பாக்கிஸ்தான் அதிகாரிகளின் தற்றுணிபுக்கேற்ப புலமைப் பரிசில்கள் பயிற்சி நெறிக் காலத்தின்போது எந்நேரத்திலேனும் நிறுத்தப்படலாம். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில், புலமைப் பரிசு பெற்றவர் தனது சொந்தச் செலவிலேயே இலங்கைக்குத் திரும்பிச் செல்லும்படி வேண்டப்படலாம்.

3. **தகவுத்திறன் :** அபேட்சகர்கள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யவேண்டும்.

(i) இலங்கைப் பிரசைகளாக இருக்க வேண்டும்.

(ii) பட்டப்பின் புலமைப் பரிசில்களைப் பொறுத்தவரையில் விண்ணப்பதாரிகள் 31.12.70 அன்று 35 வயதுக்குக் குறைந்தவராய் இருக்க வேண்டும் ; எனினும் 20–25 க்கு இடைப்பட்ட வயதினருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். பட்டமுன் புலமைப்பரிசில்களைப் பொறுத்தவரையில் விண்ணப்பதாரிகள் 21.12.70 அன்று 17 வயதுக்கும் 22 வயதுக்கும் இடைப்பட்டவராக இருக்க வேண்டும்.

(iii) பட்டப்பின் புலமைப் பரிசில்களைப் பொறுத்தவரையில் விண்ணப்பதாரிகள் அங்கீகரிக்கப்படும் ஒரு பல்கலைக் கழகத்தால் எந்திரவியலில் வழங்கப்படும் இரண்டாம் வகுப்புப் பட்டமேனும் பெற்றிருக்க வேண்டும்.

(iv) பட்டமுன் புலமைப் பரிசில்களைப் பொறுத்தவரையில் விண்ணப்பதாரிகள் இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி க. பொ. த. (சா. தர) பத்திரப் பரீட்சையில் 6 பாடங்களில் சித்தி அடைந்திருப்பதுடன் குறித்த இரு தடவைகளுள் பின்வரும் சித்திகளையும் பெற்றிருக்க வேண்டும்.

(அ) கணிதத்தில (தூய/பிரயோக/உயர்தர) திறமைச் சித்தி.

(ஆ) பௌதிகத்தில் திறமைச் சித்தி.

(இ) இரசாயனம், ஆங்கில மொழி ஆகியவற்றில் ஒன்றில் திறமைச் சித்தியும் மற்றையதில் சாதாரண சித்தியும்.

**குறிப்பு 1.**—அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு சபையில் அல்லது கூட்டுத்தாபனத்தில் அல்லது பல்கலைக் கழகத்தில் அல்லது அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் ஒரு நிலையத்தில் விதிக்கப்பட்டுள்ள ஒரு காலத்துக்கு சேவை புரிவதாக ஒரு உடன்படிக்கை அல்லது முறி செய்துள்ள ஓர் அபேட்சகர் அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் விதிக்கப்பட்டுள்ள காலத்தைப் பூர்த்தி செய்து அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைப்பாடுகளை 31.12.70 அளவில் நிறைவேற்றி இருந்தாலன்றி விண்ணப்பித்தலாகாது.

**குறிப்பு 2.**—தற்காலிக நியமனங்களை வகிக்கும் அரசாங்க ஊழியர்களும் நிரந்தர நியமனங்களை வகிக்கும், ஆனால் நியமனங்களில் உறுதிப்படுத்தப்படாதவர்களான அரசாங்க ஊழியர்களும் தங்கள் பதவிகளைத் துறப்பதற்கு சம்மதமாயிருந்தாலன்றி இவற்றுக்கு விண்ணப்பித்தற்கு உரித்துடையராகார். படிவத்தின் 15 (ஈ) ம் கூட்டில் அத்தகைய விருப்பம் தெரிவிக்கப்படல் வேண்டும்.

4. **அளிப்பு நிபந்தனைகள் :** இப்புலமைப் பரிசில்கள் கீழ்க்காணும் நயங்கள் உடையனவாய் இருக்கும்—

(அ) மாதாந்தம் ரூ. 300/– சகாயப்படி. (விடுதிச்சாலை, கல்லூரிக் கட்டணங்கள் ஆகியவற்றை மாணவர் இதைக்கொண்டு செலுத்த வேண்டும்).

(ஆ) சாதனங்களுக்கென வருடாந்தம் ரூ. 200/– சகாயப்படி.

(இ) அங்கு மேற்கொள்ளும் கற்கைச் சுற்றுலாக்களுக்கென வருடாந்தம் ரூ. 200/– சகாயப்படி.

(ஈ) மாணவர்களுக்கு வைத்திய செலவுகள் ஏற்படின், அது வருடாந்தம் ரூ. 25/– வரை மீட்டளிக்கப்படும்.

**குறிப்பு 1.**—பாக்கிஸ்தானுக்குப் போய்திரும்புதற்கான பிரயாணச் செலவுகள் வெகுமதி அளிப்பு நிபந்தனைகளில் சேர்க்கப்பட்டில்லை ; தெரிவு செய்யப்படும் அபேட்சகர்களே அச்செலவைப் பொறுக்க வேண்டும். இச்செலவை பொறுக்கச்சம்மதமாவென விண்ணப்பதாரிகள் விண்ணப்பப் படிவத்தின் 24 ஆம் கூட்டில் கூற வேண்டும்.

**குறிப்பு 2.**—இப்புலமைப் பரிசில்களுக்குத் தெரிவு செய்யப்படும் அரசாங்க ஊழியர்களுக்கு லீவு வழங்குதல், காலத்துக்குரிய திறைசேரி விதிகளுக்கும் வித்தியா பகுதி விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் அமையும்.

5. **நேர்முகப் பரீட்சை :** தகவுடைய அபேட்சகர்கள் கொழும்பில், விதிக்கப்படும் நேரத்திலும் இடத்திலும் ஒரு நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமளிக்க வேண்டும். இந்நேர்முகப் பரீட்சை தொடர்பில் பிரயாணச் செலவேனும் வேறு எவ்வித செலவேனும் கொடுபடாது. இந்நேர்முகப் பரீட்சையின்போது தராதரப் பத்திரங்கள் பிறப்புச் சாட்சிப் பத்திரம், தமது உரிமையை அத்தாட்சிப்படுத்தும் சான்றுகள் ஆகியவற்றின் மூலங்களையும் சமர்ப்பிக்கக்கூடியவராய் இருக்க வேண்டும்.

6. **உடன்படிக்கை :** தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள், பாக்கிஸ்தானுக்குச் செல்லுமுன் பின்வரும் முறையில் இலங்கை அரசாங்கத்துடன் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும் .—

(அ) ஏனைய விடயங்களுடன், விதிக்கப்படும் கற்கை நெறியை விசுவாசமாகவும் விவேகமாகவும் பின்பற்றி திருப்திகரமாகப் பூர்த்தி செய்வதாகவும் வேண்டப்படுமிடத்து, பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தபின் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு (அரசாங்கத்தால் இது தீர்மானிக்கப்பட வேண்டியது) இலங்கை அரசாங்கத்தின் கீழ் சேவை புரிவதாகவும் ;

(ஆ) உடன்படிக்கையின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய ஒழுகத் தவறுமிடத்து புலமைப் பரிசின் முழுச் செலவையும் (அதாவது புலமைப் பரிசு தொடர்பாக இலங்கை அரசாங்கத்துக்கும் அதனை வழங்கும் முகவராண்மைக்கும் ஏற்படும் முழுச் செலவையும்—அரசினர் ஊழியர்களைப் பொறுத்தவரையில் சம்பளங்கள் சகாயப்படிகள் ஆதியன உட்பட) இலங்கை அரசாங்கத்துக்குத் திருப்பிக் கொடுப்பதாகவும்.

7. **வைத்திய பரீட்சை :** தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் பாக்கிஸ்தானில் கற்கை நெறி ஒன்றினை மேற்கொள்தற்கு வேண்டிய உடல்நலன், மனநலன் உடையவரா என பரீட்சித்தற்கு அரசாங்கத்தால் நியமிக்கப்படும் ஒரு விசேட வைத்தியர் சபையினால் நடாத்தப்படும் வைத்திய பரீட்சையில் தேற வேண்டும்.

8. உத்தேச கற்கை நெறியைப் பின்பற்றுவதால் பயிற்சியாளர்கள் கூடிய சம்பளங்களுக்கேனும் பதவி உயர்ச்சி வாய்ப்புக்களுக்கேனும் உரித்துடையராகார்.

9. விண்ணப்பத்தில் கொடுபடும் விபரம் யாதேனும் பிழையெனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னராயின் அளிப்பு மீழ்க்கப்படுதற்கும் விண்ணப்பதாரி பாத்திராவார்.

10. தெரிவில் தேறிய அபேட்சகர் ஒருவர், தெரிவு செய்யப்பட்ட பின் தெரிவை அல்லது அளிப்பை ஏற்க மறுப்பின், இரண்டு வருட காலத்துக்கு வேறு புலமைப் பரிசில்களைப் பெறும் வாய்ப்பிலிருந்து தடுக்கப்படுவார்.

11. நியமனங்கள் முகவராண்மைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின் அவைகளை ஏற்றுக் கொள்தல் அளிப்பை வழங்கும் முகவராண்மையின் தற்றுணிபையே பொறுத்ததாகையால் இலங்கை அதிகாரிகளின் நியமனமே அளிப்பாகுமெனக் கருதப்படலாகாதென விண்ணப்பதாரிகள் திட்டவட்டமாக அறிந்துகொள்ள வேண்டும்.

12. ஓர் அபேட்சகரின் தெரிவுக்கு எம்முறையிலேனும் ஆதரவு வேண்டல் அல்லது செல்வாக்குப் பிரயோகித்தற்கு எத்தனித்தல் அத்தகைய அபேட்சகரைத் தகுதியற்றவராக்கும்.

13. இவ்விளம்பரத்தின் தேவைகளுக்கும் விண்ணப்பப் படிவத்தில் அச்சிடப்பட்டுள்ள அறிவுறுத்துரைகளுக்கும் சகல வகைகளிலும் அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

14. இவ்வலுவலகத்திலிருந்து பெறற்பாலனவாகிய விசேட படிவத்தில் தயாரிக்கப்படவேண்டிய விண்ணப்பங்கள் 1970 ம் ஆண்டு ஜூன் மாதம் 25 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி, அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அனுப்பப்பட வேண்டும். உரிய திகதிக்குப் பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

15. ஒவ்வொரு விண்ணப்பம் தொடர்பிலும் ரூ. 10/– பெறுமதியான முத்திரை ஒட்டப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் முதற் பக்கத்தில் அந்நோக்கத்துக்கான இடத்தில் ரூ. 10/– பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டு விண்ணப்பதாரியின் கையொப்பத்தால் அழிக்கப்பட வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் முத்திரைக் கட்டணம் திருப்பிக் கொடுபடமாட்டாது.

16. ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய பகுதித் தலைவர் மூலம் அனுப்புதல் வேண்டும். சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக் கழகங்கள், அரசாங்க உதவி

பெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் நிலையங்களிலுள்ள விண்ணப்பதாரிகள் உரிய நிலையத் தலைவர் மூலம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரி தனது பதவியிலிருந்து விலகச் சம்மதிக்குமிடத்தும் இத்தேவை அமையும். கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சிலுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை உரிய பிரதேச வித்தியாதிபதி மூலம் அனுப்புதல் வேண்டும்.

17. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக் கொள்ளப்பட்டமை பற்றி விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் பெறத்தவறும் விண்ணப்பதாரிகள் கல்வி, கலாச்சார அலுவல்களின் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அதுபற்றி உடனே அறிவிக்க வேண்டும். அங்ஙனம் செய்யத்தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
3.6.1970.

6—274—11.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,910

---

## ஆயுள்வேத திணைக்களம்

### வைத்தியசாலைச் செயலாளர், ஆயுள்வேத மத்திய வைத்தியசாலை

ஆயுள்வேதத் திணைக்களத்து மத்திய வைத்தியசாலையில் வைத்தியசாலைச் செயலாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவங்களின் பிரகாரம் செய்யப்பட்டு, ஆயுள்வேத ஆணையாளர், ஆயுள்வேத திணைக்களம், கொட்டா வீதி, கொழும்பு 8 என்ற முகவரியில் 1970.6.25 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாகக் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

2. **சம்பள அளவுத்திட்டம்.**—இப்பதவிக்கான திரட்டிய சம்பள அளவுத்திட்டம். ரூபா 6,600—8 × 180 உம், 5 × 240—9,240 ரூபாவாகும். 7,500 ரூபாவுக்கும் 8,040 ரூபாவுக்கு முன்னர் வினைத்திறமைகாண் தடைகளுண்டு.

3. **நியமன நியதிகளும், சேவை நிபந்தனைகளும்.**—

(i) இப்பதவி நிரந்தரமானதும், உபகாரச் சம்பள உரித்துடையதுமாகும். கைம்பெண் அனாதைகள் ஓய்வூதியப்பாற்றுச் சகாய நிதிக்கு உதவுதொகை செலுத்தப்படல வேண்டும்.

(ii) எல்லா வாரநாட்களிலும் சேவை நேரம் காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரைக்குமாயிருக்கும்.

(iii) தெரிவு செய்யப்படும் அபேட்சகர் பதவியில் உறுதிப்படுத்தப்படு முன்னர் திணைக்களப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுகின்றார். நியமனத் திகதியிலிருந்து 2 வருடங்களுக்குள் இப்பரீட்சையில் சித்திபெறாதுவிட்டால் அது சம்பள ஏற்றத்தை நிறுத்தி வைக்கும் பயனை விளைவிக்கும். நியமனத் திகதியிலிருந்து 3 வருடகாலத்திற்குள் இப்பரீட்சையில் சித்தி பெறத் தவறின் சேவையினின்றும் நிறுத்தும் பயனை விளைவிக்கும். சௌக்கியத் திணைக்களத்திலுல் வைத்தியசாலை செயலாளர்களுக்கென நடாத்தப்படும் பரீட்சை இத்திணைக்களப் பரீட்சையாகும்.

4. **தேவைப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும்—தான்,

(அ) 25.6.1970 ஆந் திகதியன்று 35 வயதுக்கு மேற்படாதவரென்றும் (எலவே அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்குக் கூடிய வயதெல்லை பொருந்தாது) ;

(ஆ) நற்குணமும், சிறந்த தேகாரோக்கியமுமுடையவரென்றும் ;

(இ) (i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகப் பட்டதாரியென்றும் ; அல்லது

(ii) கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள எழுதுவினைஞர் சேவையின் உறுப்பினர் ஒருவராக ஆண்டொன்றுக்குத் திரட்டிய சம்பளமாக 4,980 ரூபா (அடிப்படைச் சம்பளம் ரூபா 2,544) பெறுபவரென்றும், திருப்திகரமான சான்றளித்தல் வேண்டும்.

(i) பொது எழுதுவினைஞர் சேவை ;

(ii) சுங்கப்பகுதி எழுதுவினைஞர் சேவை ;

(iii) புகையிரத எழுதுவினைஞர் சேவை ;

(iv) அஞ்சற் பகுதி எழுதுவினைஞர் சேவை ;

(v) உ. ஆ. ஆ. கு. எழுதுவினைஞர் சேவை ;

(vi) கொழும்பு மின்சார விநியோகப்பகுதி எழுதுவினைஞர் சேவை ;

(vii) அரசாங்க மின்சாரத் திணைக்கள எழுதுவினைஞர் சேவை ;

(viii) மலேரியாத்தடுப்பியக்க எழுதுவினைஞர் சேவை ;

(ix) அளவைத் திணைக்கள எழுதுவினைஞர் சேவையும், வரைவாளர் சேவையும் ;

(x) 30.9.1946 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் நியமிக்கப்பெற்ற புகையிரத எழுதுவினைஞர் சேவையின் புகையிரத நிலைய அதிபர்கள் ;

(xi) அஞ்சல் அதிபர்கள், சைகையாளர் சேவை ஆகியன ; அல்லது

ஆண்டொன்றுக்கு திரட்டிய சம்பளமாக 4,350 ரூபா சம்பளம் பெறும் (அடிப்படைச் சம்பளம் 2,040 ரூபா) வைத்தியசாலை எழுதுவினைஞர் சேவையின் உறுப்பினர் ஒருவராயிருத்தல் வேண்டும்.

குறிப்பு :—

(i) கலை, விஞ்ஞானம் ஆகியவற்றில் முதற் பரீட்சையில் சித்திபெற்று மேற்குறித்த (உ) இன் சேவையிலுள்ளவர்கள் அரசாங்க சேவையில் 5 வருட சேவையுடையவர்களாயின் அவர்களின் விண்ணப்பங்கள் கருத்திலெடுக்கப்படும்.

(ii) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் கணக்கியல் டிப்ளோமா உடையதாயிருத்தல் கூடுதலான தகைமையளிக்கும்.

5. விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவர்களினுல் குறித்த திகதிக்கு முன்னர்பெறப்பட்டு அவை தாமதிக்கப்பட்டதற்காகிய தகுந்த காரணங்களை சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்கள் விளக்கி அவற்றை ஏற்கும்படி விதந்துரைத்தாலன்றி குறித்த திகதிக்குப் பின்னர் இவ்வலுவலகத்தில் பெறப்படும் அரசாங்க சேவையிலுள்ள அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் ஏற்றுககொள்ளப்படமாட்டா.

6. **விண்ணப்பகாரர்கள் :—**

(அ) பிறப்புப் பதவிச் சான்றிதழ் (ந. க.—ஞானஸ்நானச் சான்றிதழ்கள் அல்லது உதவிபெறும் பாடசாலைகளுக்கான பிரமாணத் தொகுப்பு நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட பிறபபுச் சான்றிதழ்கள் ஏற்றுக கொள்ளப்படமாட்டா) ;

(ஆ) உயர் கல்விச் சான்றிதழ் அல்லது உயர்தொழிற் சான்றிதழ் அல்லது அவை இரண்டும்.

(இ) இப்பதவிக்கு நியமனம் பெறுவதற்கு விண்ணப்பகாரரின் தகைமைகள், குணம், பொருத்தமுடைமை ஆகியவைபற்றி அண்மையில் பெறப்பட்ட மூன்று நற்சான்றுப் பத்திரங்கள் (எலவே அரசாங்க சேவையிலுள்ளவர்களின்கீழ் நற்சான்றுப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தேவையில்லை) ஆகியவற்றின் பிரதிகளை (மூலப்பிரதிகளையல்ல) தங்கள் விண்ணப்பங்களுடன் இணைத்தனுப்புதல் வேண்டும்.

**குறிப்பு.**—இப்பத்திரங்களினதும், நற்சான்றுகளினதும் பிரதிகள் திருப்பி அனுப்பப்படமாட்டா.

7. விண்ணப்பங்களும், அவை தொடர்பான வேறு கடிதத் தொடர்புகளும் ஆயுள்வேத ஆணையாளருக்கு விலாசமிட்டு அனுப்பப்படல் வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்கும் நேராக அனுப்பப்படக்கூடாது.

8. இந்த வர்த்தமானப் பத்திரிகையின் I ஆம் பகுதி II ஆம் பிரிவின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவை பதவி நியமனங்களுக்காகிய பொது நிபந்தனைகளைப் பார்வையிடுக.

9. எல்லா விண்ணப்பங்களும் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்படும். கடைசித் திகதியிலிருந்து ஏழு நாட்களுக்குள் கிடைத்தமைபற்றிய அறிவித்தலைப் பெறாத விண்ணப்பகாரர் எவரும் உடனே எனக்கு அதுபற்றி அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின் பிரகாரம் ஒழுகத் தவறின விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமையை இழப்பர்.

டபிள்யு. ஜே. ஆர். நவகமுவ,
ஆயுள்வேத ஆணையாளர்.

ஆயுள்வேத திணைக்களம்,
கொழும்பு 8,
1970 ம் ௵ ஜூன் ௴ 3 ந் உ.

## மாதிரிப் படிவம்

வைத்தியசாலைச் செயலாளர் பதவி ஆயுள்வேதத் திணைக்களம்

1. முழுப்பெயர் : ————.
   (அ) முதற்பெயர் : ————.
   (ஆ) பிற பெயர்கள் : ————.

2. முகவரி : ————.

3. பிறந்த திகதியும், இடமும் (பிறப்புப் பதிவுச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்) : ————.

4. 1970———சரியான வயது.
   வருடங்கள் : ———— மாதங்கள் : ————. நாட்கள் :————.

5. கல்வித் தகைமைகள் : ————.

6. (i) தற்போது வகிக்கும் பதவியும், அதற்காகும் சம்பளமும் :————.
   (ii) அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி : ————.
   (iii) சேவையாற்றிய இடங்கள்—
   (அ) ————.
   (ஆ) ————.
   (இ) ————.
   (iv) தற்பொழுது சேவையாற்றுமிடம் : ————.

7 பாடசாலையை விட்டபின்னர் செய்த வேலையின் தன்மை : ————.

8. பிற தொழில்களின் விபரங்கள் : ————.

9. ஏனைய விபரங்கள் : ————.

இவ்விண்ணப்பத்தில் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் சரியானவையும், உண்மையானவையும் என நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதன்கண் உள்ள விபரங்களில் ஏதாவது பொய்யானது அல்லது தவறானது எனக் கண்டுபிடிக்கப்படுமிடத்து, அத்தகைய தவறு தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின் நான் தகுதியற்றவராக்கப்படுவதற்கும், நியமனத்திற்குப் பின் காணப்படின் நட்டஈடு எதுவுமின்றி விலக்கப்படுவதற்கும் ஆளாவேன் என்பதனையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பகாரரின் ஒப்பம்.

திகதி : ————,

6–244—11.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,910.

---

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கைப் பரீட்சைப் பகுதி

### தமிழ் ஆசிரியர் பரீட்சை—ஒக்டோபர், 1970

மேற்படி பரீட்சை கீழ்க்குறிக்கப்படும் பரீட்சை நிலையங்களில் 1970 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 18, 19, 20, 21 ஆந் திகதிகளில் நடைபெறும்.

**பரீட்சை நிலையங்கள்.—**

அம்பலாங்கொடை, அனுராதபுரம், பதுளை, பண்டாரவளை, மட்டக்களப்பு, கொழும்பு, தம்புள்ளை, திக்வல்லை, எகலியகொடை, கல்கமுவை, காலி, ஹோமாகம, ஹொரணை, யாழ்ப்பாணம், களுத்துறை, கண்டி, கேகாலை, குளியாப்பிட்டி, குருநாகல், மாத்தளை, மாத்தறை, மொனறாகலை, நாவலப்பிட்டி, நிக்கவரெட்டியா, நீர்கொழும்பு, நுவரெலியா, பருத்தித்துறை, பொல்லனறுவை, இரத்தினபுரி, திரிகோணமலை, வவுனியா, வியாங்கொடை.

2. பிரமாணங்களின் 2 ம் பந்தியிற் குறிப்பிட்டவாறு ஆசிரியர்கள் மாத்திரம் இப்பரீட்சைக்குத் தோற்றலாம்.

3. மாதிரி விண்ணப்பப் படிவம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இவை 8" × 13" அளவினதாய கடதாசியில் முறைப்படி தயாரிக்கப்பட்டு விண்ணப்பப்படிவம் (தட்டெழுத்து மூலம் தயாரிக்கப்படின் நன்று) 1970 ஆம் ஆண்டு யூலை மாதம் 10 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் பரீட்சாதிகாரி, பரீட்சைப்பகுதி, மலே வீதி, கொழும்பு 2 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பும் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் குறிப்பிட்டிருத்தல் வேண்டும். பரீட்சாதிகாரியின் அல்லது அங்கு கடமையாற்றும் வேறு ஊழியர்களினது தனிப்பட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

வர்த்தமானப் பத்திரிகையிற் கொடுக்கப்பட்ட மாதிரிப் படிவத்தை ஒத்திராத, பரீட்சார்த்திகளால் தம் எண்ணப்படி தயாரித்து அனுப்பப்படும் விண்ணப்பங்களும், விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் கடைசித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

4. பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பங்களை அனுப்புவதற்கு முன்னதாக 1969 ஆம் ஆண்டு ஒக்தோபரிலும் அதன் பின்னரும் நடைபெறும் தமிழ் ஆசிரியர் பரீட்சைக்காக திருத்தப்பட்ட பிரமாணங்களையும் பாடத் திட்டங்களையும் வாசித்து அவற்றைப் பற்றிய பூரண விளக்கத்தைப் பெறுதல் வேண்டும்.

5. இப்பிரமாணங்களையும் பாடத்திட்டங்களையும் நேரிற்பெற விரும்புவோர் அரசாங்க வெளியீட்டு அலுவலகத்திலிருந்து 40 சதத்திற்குப் பெற்றுக் கொள்ளலாம் ; தபால் மூலம் பெற விரும்புவோர் தமது கடிதத்துடன் ஒரு ரூபாவிற்குரிய காசோலையையேனும் அல்லது காசுக் கட்டளையையேனும் பரீட்சாதிகாரிக்கு அனுப்பினால் அவர்களுக்கு இது அனுப்பிவைக்கப்படும்.

6. மேலே 4 ஆம் பந்தியிற் குறிப்பிடப்பட்ட தமிழ் ஆசிரியர் பரீட்சைப் பிரமாணங்களுடன் கீழ்க்காணும் திருத்தங்களும் சேர்க்கப்பட வேண்டும். இவை 1970 ஒக்டோபர் மாதத் தமிழ் ஆசிரியர் பரீட்சைக்கும் நடைமுறையிலிருக்கும் :—

இப்பிரமாணத்தின் 1 வது பந்தி, பகுதி " அ " பின்வருமாறு திருத்தப்படல் வேண்டும் :—

1. **பரீட்சைத் திட்டம்.**—இப்பரீட்சை மூன்று பகுதிகளைக் கொண்டதாகும்.

பகுதி (அ) கல்விப் பாடங்களில் எழுத்துப் பரீட்சை வினாத்தாள்கள்,
பகுதி (ஆ) தொழிலுக்குரிய பாடங்களில் எழுத்துப்பரீட்சை வினாத்தாள்கள்,
பகுதி (இ) கற்பித்தலில் செய்கை முறைப் பரீட்சை என்பனவாகும்.

**பகுதி " அ "**

**கட்டாய பாடங்கள் :**

(i) தமிழ்ப்பாஷையும் இலக்கியமும்.
(ii) எண்கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம்.

**விருப்பத்திற்குரிய பாடங்கள் :**

| | | | |
|---|---|---|---|
| (iii) | சரித்திரம் | (x) | ஆங்கிலம் |
| (iv) | புவியியல் | (xi) | வர்த்தகவியல் |
| (v) | குடியியல் | (xii) | கணக்கியல் |
| (vi) | சித்திரம் | (xiii) | சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் |
| (vii) | ஆரம்ப கணிதம் | | |
| (viii) | பொது விஞ்ஞானம் | (xiv) | பயிர் செய்கையியல் |
| (ix) | மனையியல் | (xv) | பொருளியல |

விருப்பத்திற்குரிய பாடங்களில் கணக்கியல் அல்லது வர்த்தகவியல் அல்லது பொருளியல் அல்லது சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் என்னும் பாடங்களைத் தெரிந்தெடுக்கும் பரீட்சார்த்திகள் கட்டாய பாடங்களில் வர்த்தக எண்கணிதத்தைத் தெரிந்தெடுத்தல் வேண்டும். தமிழ்ப் பாஷையும் தமிழ் இலக்கியமும் என்ற பாடத்துக்கு மூன்று மணித்தியால வினாப்பத்திரமாகும். மற்றைய எல்லாப் பாடங்களுக்கும் இரண்டு மணித்தியால வினாப்பத்திரங்களாகும்.

இப்பகுதியில் சித்தியடைவதற்கு ஒரு பரீட்சார்த்தி கட்டாய பாடங்கள் இரண்டிலும், விருப்பத்திற்குரிய பாடங்களில் எவையேனும் இரண்டிலும் திருப்திகரமான அளவுக்குத் தேர்ச்சியடைதல் வேண்டும். விருப்பத்துக்குரிய பாடங்களில் மூன்று பாடங்களுக்கு மேல் எடுத்தல் கூடாது.

இப்பிரமாணத்தின் 8 ஆவது பந்தி பின்வருமாறு திருத்தப்படல் வேண்டும் :—

8. இலங்கை உயர்தரப் பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சை ; லண்டன் சர்வகலாசாலைக் கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சை உயர்தரம், அல்லது இலங்கைக் கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சையுடன் இலங்கைச் சர்வகலாசாலைகள் இண்டர்மீடியற் பரீட்சைகளும், கீழ்வரும் தகுதிகளில் ஒன்றுமினும் உடைய ஆசிரியர்கள் :—

தமிழ் ஆசிரியர் பரீட்சையின் "அ" பிரிவுக்குத் தோற்ற வேண்டிய அவசியமில்லை.

(i) தமிழ் ஒரு பாடமாகவுள்ள இலங்கை உயர்தரப் பாடசாலைத் தராதரப் பத்திரம் (தேர்ச்சி மொழியாகவுள்ள தமிழ் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).

(ii) இரண்டு திறமைச் சித்திகளுடன் பெற்ற சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம், அல்லது தமிழ்ப்பாஷை, எண்கணிதம் அல்லது தூயகணிதம் அல்லது ஆரம்பகணிதம் அல்லது வர்த்தக கணிதம் உட்பட வேறு நான்கு பாடங்களில் இரண்டு தடைவைகளுக்கு மேற்படாமற் பெற்ற கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் (சாதாரண தரம்); இவற்றுள் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

இத்துடன் லண்டன் (உயர்தரக்) கல்விப் பொதுத் தராதரப் பத்திரத்தில் அல்லது இலங்கை (உயர்தரக்) கல்விப் பொதுத் தராதரப் பத்திரத்தில் ஒரே தடவையில் தமிழிலும் வேறு இரண்டு பாடங்களிலும் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(iii) தமிழ் ஒரு பாடமாகவுள்ள இலங்கைப் பல்கலைக்கழக அல்லது வித்தியோதய பல்கலைக்கழக அல்லது வித்தியாலங்கார பல்கலைக் கழக இண்டர்மீடியற் பரீட்சைச் சித்திகள்.

3. இப்பிரமாணத்தின் 4 ஆம் பக்கத்தில் 8 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிவாய்ந்த ஆசிரியர்களும், பின்வரும் தகைமைகள் உடைய ஆசிரியர்களும் தமிழ் ஆசிரியர் பரீட்சையின் "அ" பிரிவினின்றும் விலக்களிக்கப்படுவர்.

வர்த்தக எண்கணிதம், கணக்கியல், வர்த்தகவியல், பொருளியல், சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் ஆகிய ஐந்து பாடங்களில் இரண்டு திறமைச் சித்திகளுடன் கூடிய சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் அல்லது வர்த்தக எண்கணிதம், கணக்கியல், வர்த்தகவியல், பொருளியல், சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் ஆகிய பாடங்களில் எவையேனும் இரண்டு பாடங்களில் பெற்ற திறமைச் சித்திகளுடன் தமிழ்ப்பாஷை, வர்த்தக எண்கணிதம் ஒரு தடவையில் அல்லது இரு தடவைகளில் வேறு நான்கு பாடங்கள் ஆகிய ஆறு பாடங்களிற் பெற்ற கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் (சாதாரண தரம்) ;

**இத்துடன்**

இலங்கை (உயர்தரக்) கல்விப் பொதுத் தராதரப் பத்திரத்தின் கணக்கியல், வர்த்தகமும் நிதியும், பொருளியல் ஆகிய மூன்று பாடங்களில் எவையேனும் இரண்டு பாடங்களில் ஒரே தடவையிற் சித்திபெற்றிருத்தல் அல்லது தொழில் நுட்பக் கல்லூரியில் கணக்குப் பதிவியல் தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் உயர்தர வர்த்தகவியல் தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது பரீட்சைப் பகுதியால் நடாத்தப்படும் கணக்குப் பதிவியல் தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது தட்டெழுத்தும் சுருக்கெழுத்தும் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் அத்தகைய பரீட்சார்த்திகள் பரீட்சையில் எப்பகுதிக்காவது தோற்றுதிருப்பதற்கான சலுகைகள் கோரும் தமது கடிதங்களை நேரகாலத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

## இலங்கைப் பரீட்சைப் பகுதி

### 1970 ம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் நடைபெறும் தமிழ் ஆசிரியர் பரீட்சைக்கான மாதிரி விண்ணப்பப் படிவம்

பரீட்சையின் எப்பகுதிக்குத் தோற்றுகிறீர் ; சுட்டிலக்கம் :

————,
(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

(இங்கே "A" அல்லது "B" எனப் பெரிய எழுத்தில் எழுதுக).

1. பரீட்சார்த்தியின் வழமையான கையொப்பம் :————.
ஆணு/பெண்ணு : ————.

2. பரீட்சார்த்தியின் முழுப்பெயர் : ————.
(வண./திரு./திருமதி/செல்வி என்பதைத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். ஆசிரியராயின் உத்தியோகத்தில் வழங்கும் பெயரினை எழுதுதல் வேண்டும். அன்றேல், பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் உள்ள பெயரினை எழுதுதல் வேண்டும்).

3. பிரவேச அட்டை முதலியன அனுப்ப வேண்டிய முகவரி: ————.

4. பரீட்சை நிலையம் (மிகக்கூடிய விருப்பத்திற்குரிய நிலையத்தை முதலாவதாகவும் மற்றவற்றை அதன் கீழும் எழுதுக):
1. : ————.
2. : ————.
3. : ————.

(மூன்று நிலையங்களும் வர்த்தமானப் பிரசுரத்தின் முதலாம் பந்தியிற் தரப்பட்ட நிலையங்களிலிருந்து தெரியப்பட்டனவாயும் வேறு வேறாயும் இருத்தல் வேண்டும்).

5. (அ) பரீட்சைக் கட்டணம் சம்பந்தமாகத் தேவையான முத்திரைகளை இங்கே ஒட்டுக. தமிழ் ஆசிரியர் பரீட்சை "ஏ" பிரிவிற்கு ரூபா 25.00 ; "பி" பிரிவிற்கு ரூபா 20.

(ஆ) ஒட்டப்பட்ட முத்திரைகளின் பெறுமதி ரூபா ....................

முத்திரை ஒட்டும் இடம். இம் முத்திரை பரீட்சார்த்தியின் கையொப்பமும் திகதியும் இடப்பட்டு பயனற்றதாக்கப்படவேண்டும். முத்திரைகள் ஒன்றையொன்று மருவாத வகையில் ஒட்டப்படல்வேண்டும்.

6. "ஏ" பிரிவின் விருப்பத்திற்குரிய பாடங்கள் ("×" என்றகுறியின் மூலம் தாம் எடுக்கும் பாடங்களைக் குறிப்பிடல் வேண்டும். இப்பகுதியிலிருந்து மூன்று பாடங்களுக்கு மேல் தெரிவு செய்தலாகாது).

| | | | |
|---|---|---|---|
| 3. சரித்திரம் | | 9. மனையியல் | |
| 4. புவியியல் | | 10. ஆங்கிலம் | |
| 5. குடியியல் | | 11. வர்த்தகவியல் | |
| 6. சித்திரம் | | 12. கணக்கியல் | |
| 7. ஆரம்ப கணிதம் | | 13. சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் | |
| 8. பொதுவிஞ்ஞானம் | | 14. பயிர்ச்செய்கையியல் | |
| | | 15. பொருளியல் | |

7. தற்போதைய நியமனம் பற்றிய விபரம் :—
(அ) பாடசாலையின் பெயரும் முகவரியும் முகாமையும் : ————.
(ஆ) அந்தஸ்து : ————.
(நிரந்தர/தகுதிகாண்/தற்காலிக/பதில் ஆசிரியரா ?)
(இ) பரீட்சார்த்தி கற்பிக்கும் பாடங்கள் : ————.
(சாதாரண பாடசாலைப் பாடங்கள்/விசேட பாடசாலைப் பாடங்கள்)
(ஈ) பரீட்சார்த்தி எம்மொழி மூலம் கற்பிக்கிறார் ? ————.
(உ) வாரம் ஒன்றுக்கு எத்தனை மணித்தியாலங்கள் ? :————.
(ஊ) மாதாந்த அடிப்படைச் சம்பளம் : ————.

8. ஆசிரியரின் பதிவிலக்கத்தை அல்லது நியமனக் கடிதத்தின் இலக்கத்தை அல்லது கல்வியதிபதி அல்லது பிரதேசக் கல்வி அதிகாரியிடமிருந்து நியமன அங்கீகாரம் பற்றிய உறுதிக் கடிதத்தின் விபரத்தை இங்கே குறிப்பிடுக : ————.

9. தாம் சித்தியடைந்த வேறு பரீட்சைகளின் அல்லது சேவையின் அடிப்படையில் சலுகைகோரின் அது பற்றிய விபரம் : ————.
சலுகை கோரும் பகுதி : ————.

10. இப்பகுதி பாடசாலை முகாமையாளரால் அல்லது தலைமை ஆசிரியரால் நிரப்பப்படல் வேண்டும்.

இப்பரீட்சார்த்தி சம்பந்தப்பட்ட சகல கடிதக் குறிப்புகளையும் பரிசீலனை செய்தேன் எனவும், அவற்றின்படி இவ்விண்ணப்பத்தின் 2 ம், 7 ம், 8 ம் 9, ம் கூடுகளிலுள்ள விபரங்கள் சரியானவை எனவும் நான் உறுதிப்படுத்துகிறேன்.

பாடசாலையின் பெயர் : ————.

பாடசாலை முகாமை ; ————.

(அரசாங்கக் கல்வியதிபதியின் முகாமைக்குட்பட்ட/உதவி நன்கொடை பெறாத அனுமதி பெற்ற பாடசாலையா எனக் குறிப்பிடுக)

கையொப்பம் : ————.

பெயர் : ————.

திகதி : ————.

11. பரீட்சார்த்தியின் உறுதிக்கூற்று :

இவ்விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்ட விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும் இங்கு ஒட்டப்பட்ட முத்திரை என்னால் ஒட்டப்பட்டதெனவும் இது இதன்முன் பயன்படுத்தப்படாத பெறுமதியுள்ள முத்திரை எனவும் நான் உறுதிகூறுகிறேன். இப்பரீட்சை சம்பந்தமாகப் பரீட்சாதிகாரியாற் பிரசுரிக்கப்படும் பிரமாணங்களுக்கும், பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்தில் கீழ்ப்படிந்து ஒழுக வேண்டிய விதிகளுக்கும் ஒரே முகமாக இணங்கி நடப்பதற்கு உடன்படுகிறேன்.

————,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி : ————.

12. பரீட்சார்த்தியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் ;

(எல்லாப் பரீட்சார்த்திகளுக்கும்)

.............................................. ஆகிய நான் மேற்கூறிய பரீட்சார்த்தி ........................ என்னுமிடத்தில் வதிபவர் எனவும், எனக்கு நன்கு அவரைத் தெரியும் எனவும் 1970 ம் ஆண்டு ........ மாதம் .... ஆந் திகதி எனது முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டாரெனவும் உறுதிப்படுத்துகிறேன்.

—————,
உறுதிப்படுத்தியவர் கையொப்பம்.

பெயர் : —————. தகுதி : —————.

முகவரி : —————. திகதி : —————.

**கவனிக்க வேண்டியவை :**

விண்ணப்பப் படிவத்தின் 12 ம் கூட்டில் பரீட்சார்த்தியின் கையொப்பம் தகுதியுடைய ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

(i) ஆசிரியராக இருக்கும் பரீட்சார்த்தி தான் படிப்பித்துக் கொண்டிருக்கும் பாடசாலைத் தலைவர் முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டு, அதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

(ii) ஆசிரிய சேவையிலில்லாத பரீட்சார்த்தி இப்படிவத்திற் கேட்கப்பட்டுள்ள உறுதிப் பத்திரத்தை சமாதான நீதவான், சத்தியப் பிரமாண அதிகாரி, வழக்கறிஞர் அல்லது நொத்தாரிசு, 4,800 ரூபாவையேனும் அதற்கு மேற்பட்ட தொகையையேனும் வருடாந்த சம்பளமாகப் பெறும் நிரந்தர அரசாங்க உத்தியோகத்தர் அல்லது தரைப்படை, கடற்படை, ஆகாயப்படை ஆகிய வற்றிலுள்ள ஆணைபெற்ற உத்தியோகத்தர், அரசாங்க, கல்வி அதிகாரியின் முகாமைக்குட்பட்ட அல்லது அங்கீகாரம் பெற்ற பாடசாலை அதிபர் அல்லது அத்தகைய பாடசாலையின் ஓய்வு பெற்ற அதிபர், அப்பகுதியின் கிராமசேவகர், புத்தவிகாரைக்குப் பொறுப்பாகவுள்ள பிக்கு, தலைமைப் பிக்கு, வேறு மதபீடங்களுக்கு பொறுப்பாக உள்ள மதகுருமார், மதிப்பிற்குரிய வேறு சமயப் பெரியார்கள் ஆகியோர்களில் ஒருவரைக் கொண்டு உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

மேற்கூறிய தகுதிவாய்ந்த ஒருவரால் பரீட்சார்த்தியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டது என்பதற்குப் பரீட்சார்த்தியே முழுப் பொறுப்பாளியாவர்.

கே. ரீ. டபிள்யூ. சமணசூரிய,
பரீட்சாதிகாரி.

பரீட்சைப் பகுதி,
மலே வீதி,
கொழும்பு 2,
1970 ம் ஆண்டு மே மீ 23 ந உ.

6–163—11.6.70 ந் திகதிய வர்த்தமானி 14,910

---

இல. 1/23/33/2 (ஜி)

## தட்டெழுத்தாளர் சேவையின் உயர்தரத்திற்குப் பதவியேற்றஞ் செய்வதற்குப் பரீட்சை

24.10.1969 ஆந் தேதியில் இல. 14,877 கொண்ட அரசாங்கச் செய்திமடலில் தோன்றும் 1969 ஒற்றோபர் மாதம் 11 ஆந் தேதியிட்ட அறிவித்தலின் பிரகாரம் மேற்கூறிய பரீட்சை 1969 திசம்பர் மாதம் 7 ஆந் தேதி நடைபெறவிருந்து, 12.12.1969 ஆந் தேதியின் இல. 14,884 கொண்ட அரசாங்கச் செய்திமடலில் தோன்றும் 30.11.1969 ஆந் தேதியிட்ட அறிவித்தலின் பிரகாரம் 1970, பெப்புரவரி மாதம் 27 ஆந் தேதியில் நடைபெற்றது. இப்பரீட்சையில் " தட்டெழுத்து " ப் பாடத்தில் நடைபெற்ற சோதனை நிராகரிக்கப்பட்டுள்ளதெனவும் இப்பாடத்தில் புதிய ஒரு சோதனை விரைவில் நடைபெறுமெனவும் இப்பரீட்சைக்குத் தோன்றிய பரீட்சார்த்திகள் யாவர்க்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது புதிய சோதனையின் தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

பீ. டி. உடுவெல,
திறைசேரி இணைப் பிரதிச் செயலாளர்.

பொதுத் திறைசேரி,
கொழும்பு,
1970 ம் ஆண்டு யூன் மீ 2 ந உ.

6–245—11.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,910.

---

## இலங்கை மின்சாரச் சபை

### தொழில் பயில்வோரை பயிற்சியளித்தலும் தேர்ந்தெடுத்தலும்

### தொழில்நுட்பப்பயிற்சி நிலையம், காசில்றே

தொழில் பயில்வோராக, காஸில்றேயில் உள்ள தொழில்நுட்பப் பயிற்சி நிலையத்தில் பயிற்சியளிப்பதற்குத் தெரிவுசெய்யும் பொருட்டு, அடிப்படைத் தொழில்நுட்பக்கழகம், கொத்தலாவலபுரம், கனிஷ்ட தொழில் பாடசாலைகள் அல்லது இலங்கைத் தொழிற் கல்லூரியின் பயிற்சி நிலையங்களிலுள்ள சித்திபெற்ற பயிற்சியாளரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழ்க்காணப்படும் விண்ணப்ப மாதிரிப் பத்திரத்தைப் போன்ற பத்திரத்தில் நிரப்பப்பட்டு 1970 ம் ஆண்டு, ஜூன் மாதம் 29 ம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் எனக்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்பப்படல்வேண்டும்.

2. **படியும், பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறுவதற்கான நிபந்தனைகளும்.**—தொழில் பயிலவோருக்கு காஸிலறேயில் உள்ள தொழில்நுட்பப் பயிற்சி நிலையத்தில் ஒரு வருட பயிற்சி நெறி ஒழுங்கு செய்யப்படும். பயிற்சி பெறுவோர் இப்பயிற்சி காலத்தில் நிலையத்திலுள்ள விடுதிச்சாலையில் வதிந்து, தங்கள் எல்லா உணவுகளையும் பெறுதல் வேணடும். இலங்கை மின்சாரச் சபைத் தலைவரின் அங்கீகாரம் பெற்ற உணவுகள் தொழில்நுட்பப் பயிற்சி நிலையத்தில் உள்ள உண்டிச்சாலையில் வழங்கப்படும். பயிற்சிக் காலத்தின்போது, பயிலுவோர் கிரட்டுப்படியாக நாளொன்றிற்கு ரூபா 5.60 பெறுதற்கு உரித்துடையவராவர்.

கீழ்வருவதற்கான செலவுகளைக் கழித்து, மிகுதியைத் தொழில் பயிலுவோருக்குக் கொடுக்கப்படும் :—

(அ) கொடுக்கப்படும் உணவின் விலை ;

(ஆ) புத்தகங்கள் வாங்குவது, பிரயாணம், உடுப்பு மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி நிலையத்தின் அதிபரினால் தேவையென்று கருதி நிலையத்தில் அளிக்கப்படும் வசதிகளுக்கான செலவு ;

(இ) தொழில்நுட்பப் பயிற்சி நிலையத்தின் விதிகளின் பிரமாணங்களை மீறும் தொழில் பயில்வோருக்குத் தலைவரால் விதித்த குற்றப் பணம் (சிறிய குற்றம் புரியும் தொழில் பயிலுவோர் குற்றப் பணத்திற்கும் பாரதூரமான தவறு செய்பவர்கள் வேலையிலிருந்து நீக்கப்படுதற்கும் பாத்திராவர்) ;

பயிலுவோர் வகுப்புகளுக்கு வருதற்கு தங்களுக்குத் தேவையான உடுப்பு மற்றும் இலங்கை மின்சாரச் சபைத் தலைவரினால் அங்கீகாரம் பெற்ற விதிக்கப்படும் விடுதிச்சாலையில் பாவிப்பதற்கான பொருட்களும் தாங்களே சேகரித்துக் கொள்ள வேண்டும்.

3. **தேவையான தகைமைகளும், வயதும்.**—மனுதார் ஒவ்வொருவரும் தான்—

(அ) 1970 ம் ஆண்டு, ஜூன் மாதம் 30 ந் திகதியன்று வயதில் பதினாறுக்குக் குறைந்தவரோ, இருபதுக்கு மேற்பட்டவரோ அல்லர் எனவும் ;

(ஆ) 7 ம் வகுப்புப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார் எனவும்

(இ) தேகாரோக்கியம் உடையவர் எனவும் ;

(ஈ) வம்சாவழியாகவோ அல்லது பதிவு வழியாகவோ இலங்கையர் எனவும், திருப்திகரமான சான்று சமர்ப்பித்தல் வேண்டும்.

4. **நியமன நியதிகள்.**—

(அ) தொழில் பயிலுவோர் தங்களுக்கு விதித்த படிப்பு நெறியை ஊக்கத்துடனும் விசுவாசத்துடனும் பின்பற்றுவதாகவும் பதவியில் சேர்க்கப்பட்ட நாளில் இருந்து 5 ஆண்டுக்காலத்திற்கு சேவை செய்வதாகவும் ஓர் உடன்படிக்கை செய்வதுடன் பெற்றோரில் ஒருவர் அல்லது பாதுகாவலர், இரண்டு பிணையாளர் இவர்களுடன் ரூபா 2,000/– க்கு ஒரு முறியில் உடன்பாடு செய்தல் வேண்டும். பயிற்சி வகுப்பைச் சித்திகரமாக முடித்து 1962 ம் ஆண்டு 5 ம் இலக்க பருவப்பத்திரத்தில் விதிக்கப்பட்ட தரத்தை அடையவர்கள் 3 ம் வகுப்புப் பதவிகளுக்கான வெற்றிடத்தில் நியமனம் அளிப்பதற்கு கருதப்படுவர். குறைந்தது மூன்று வருடகாலம் 3 ம் வகுப்புப் பதவியிலே நிறைவேற்றிய பின், அவர்களின் 2 ம் வகுப்பு உயர்ச்சிக்கான விண்ணப்பங்களை, மற்றையோருடைய விண்ணப்பங்களுடன் கருதப்படும்;

(ஆ) வேலையிலும் நடத்தையிலும் திருப்தியளிக்காத அல்லது அளிக்கப்படும் பயிற்சியைப் பயன்படுத்தாத தொழில் பயிலுவோர் எந்தநேரத்திலும் இடைநிறுத்தப்படுவதற்குப் பாத்திரராவர். இந்தச்சபையிலே மேலும் பயிற்சி பெறுவதற்கு உரிமைகோருவதற்கும் தகுதியற்றவராவர். மேலும், இடைத்தங்கலாக, குறிப்பிட்ட தொழில் பயில்பவரின் மாட்டு இ. மி. ச. செலவு செய்த தொகையை, ஈடுசெய்ய வேண்டியவருமாவர். பரீட்சார்த்திகள் சாதாரணமாக ஓராண்டுக்காலத்தில் பயிற்சிநெறியை நிறைவேற்ற வேண்டுமெனக் கோரப்படுவர்.

(இ) தொழில் பயிலுவோர், தொழில்நுட்பப் பயிற்சி நிலையம், இதன் விடுதிச்சாலை, தொழிற்சாலை ஆகியவற்றின் சட்டப் பிரமாணங்களுக்கு இசைந்து நடக்க வேண்டும்.

(ஈ) தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் தேகாரோக்கியம் உடையவர் என்று அதற்கான வைத்தியப் பரீட்சையில் சித்தி எய்த வேண்டும். அத்துடன் இத்தீவின் எப்பகுதியிலேனும் சேவை யாற்றக் கடமைப் பட்டவராவர்.

(உ) தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்தி, பதிவு செய்யும் பொருட்டு பிறப்புச் சான்றிதழைச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுவர்.

(ஊ) தொழில் பயில்வோரின் பயிற்சி சம்பந்தமான, இலங்கை மினசாரச் சபைத் தலைவரின் தீர்ப்பு முடிவானதாகும்.

5. (அ) ஓராண்டுப் பயிற்சியைச் சித்திகரமாக முடித்து, 1962 ம் ஆண்டு 5 ம் இலக்கப் பருவப்பத்திரத்தில் விதிக்கப்பட்ட தரத்தையடையும் பயிலுவோர் தொழிலாளர் பதவியில் 3 ம் வகுப்பு (காலித்தானங்களில்) நியமனத்திற்குக் கருதப்படுவர். இப்பதவிக்கான சம்பளம் முதல் ஆறு மாதங்களுக்கும் திரட்டுப்படியாக நாளொன்றிற்கு ரூபா 7/– வீதம், அதன்பின் வருடாந்தம் ரூபா 2,208—9 × 54—2,694 ஆகும். தொழில் பயிலுவோருக்கு இந்தச்சபை இப்படியான பதவி நியமனங்களைச் செய்யு மென்று உறுதியளிக்காது. பயிலுவோரும் இப்பதவி நியமனங்களுக்கு உரிமை கோர இயலாது.

(ஆ) நீர் இலங்கை மின்சாரச் சபையின் ஒழுக்க நடவடிக்கைக் கட்டுப் பாட்டிற்கமைந்தவராதல் வேண்டும் என்பதோடு திருத்தப்பட்டவாறுள 1969 ம் ஆண்டின் 17 ம் இலக்க இலங்கை மின்சாரச்சபையின் ஏற்பாடு களாலும், அவற்றின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளாலும் இலங்கை மினசாரச சபையால் காலத்திற்குக் காலம் ஆக்கப்படக்கூடிய அத்தகைய விதிகள், ஒழுங்குவிதிகள், நிலையான கட்டளைகள் என்பன இலங்கை மினசாரச் சபை அதிகாரச் சட்டத்தினதும், அதற்கான திருத்தங்களாலும் இயைபான பிரிவுகளின் ஏற்பாடுகட்கு இணங்கியனவாயிருத்தல் வேண்டும்.

(இ) தெரிவு செயயப்படும் உத்தியோகத்தர் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை செயற்படுத்தவும் முக்கியமாக 1956 ம் ஆண்டின் 33 ம் இலக்கச் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்தவும் இதுவரை ஆக்கப் பட்டுள்ள விதிகளுக்கு கட்டுப்பட அல்லது இனிமேல் ஆக்கப்படும் விதி களுககு இசைந்து நடக்க வேண்டுமெனக் கேட்கப்படுவர்.

6. பரீட்சார்த்திகளைக் கொழும்பில் ஓர் பரீட்சைக்கும், வாய்மொழிப் பரீட்சை ஒன்றுககும் அழைக்கப்படுவர். இதற்கு வருதற்கான பிரயாண செலவுகளோ, ஏனைய செலவுகளோ வழஙகப்படமாட்டாது.

7. விண்ணப்பஙகள் அல்லது இவை பற்றிய கடிதப்போக்குவரத்து இலஙகை மின்சாரச் சபை முகாமையாளர், த. பெ. 540, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்பப்படவேண்டுமே அல்லாமல், திணைக்களத் தில் சேவை செய்யும் உத்தியோகத்தர் ஒருவருக்கும் தனிப்பட்ட முறையில் அனுப்பக்கூடாது.

டி. டபிள்யு. மெண்டிஸ்,
பொது முகாமையாளர்.

இலங்கை மின்சாரச் சபை,
த. பெ. இல. 540,
கொழும்பு,
1970 ம் ஆண்டு யூன் மீ 3 ந் உ.

### மாதிரி விண்ணப்பப் பத்திரம்

**தொழில் பயிலுவோர், தொழில் நுட்பப் பயிற்சி நிலையம், காசில்றே**

1. முழுப்பெயர் : ————.
   (கொட்டை எழுத்துக்களில்)
   (அ) குடும்பப் பெயர் : ————.
   (ஆ) மற்றப் பெயர்கள் : ————.
2. முகவரி : ————.
3. (அ) 1970, ஜூன் மாதம் 30 ந் திகதியன்று நிறைவான வயது : வருடங்கள் : ————. மாதங்கள் : ————. நாட்கள் :—
   (ஆ) பிறப்புத் திகதி : ————.
4. வம்சாவழியாகவா அல்லது பதிவாகவா இலங்கையர் என்பதைக் குறிப்பிடுக : ————.
5. பின்வருவோரின் பிறப்பிடம் :—
   (அ) மனுதார் : ————.
   (ஆ) மனுதாரின் தந்தை : ————.
   (இ) மனுதாரின் பாட்டனர் : ————.
   (ஈ) மனுதாரின் முப்பாட்டனர் : ————.
6. மனுதார் விவாகமானவரா, விவாகமாகாதவரா அல்லது தாரமிழந் தவரா என்பதைக் குறிப்பிடுக : ————.
7. சமூகமளித்த பாடசாலை, கல்லூரிகள், தொழில்நுட்பக் கழகங் களின் பெயர்கள் (இவற்றில் சேர்ந்த திகதிகளும் விலகிய திகதிகளும் உட்பட) : ————.
   (அ) பொதுக்கல்விக்காக : ————.
   (ஆ) தொழிநுட்பக கல்விக்காக : ————.
   (பாடசாலைகள், கல்லூரிகளினால் கொடுக்கப்பட்ட கல்வித் தரா தரப் பத்திரங்களின் பிரதிகளும், தொழிநுட்பக் கல்வி பயின்ற தொழிநுட்பக் கழகத்தினால் கொடுக்கப்பட்ட தராதர அத்தாட் சிப்பத்திரததின் பிரதிகளும் இணைக்கப்படல் வேண்டும்)
8. தொழிநுட்பக் கழகத்திலிருந்து நீங்கியபின் செய்த தொழில்களின் விபரங்கள் : ————.
9. வேறு ஏதாவது விசேடக் கோரிக்கைகள், தகைமைகள், பயிற்சி அல்லது அனுபவம் பற்றிய விவரங்கள் : ————.
10. மூன்று நற்சான்றிதழ்கள் கொடுத்துதவிய பொறுப்புள்ளவர்களின் பெயர்களும் தகுதிகளும் : ————.

(நற்சான்றிதழ்களின் பிரதிகள் மாத்திரம் இணைக்கப்பட வேண்டும்)

இந்த விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் யாவும் உண்மையானவையும், சரியானவையும் என்றும் உறுதிப் படுத்துகிறேன். அத்துடன் இதில் காணப்படும் விபரங்களிலெதுவும் பொய்யானதென்றோ, தவறானதென்றோ தேர்வுக்கு முன் கண்டு பிடிக்கப்பட்டால் நான் தகைமை நீக்கஞ்செய்யப்பட பாத்திரவாளியா வேன் என்பதையும், நியமனத்துக்குப் பின் கண்டுபிடிக்கப்பட்டால் நட்ட ஈடின்றிப் பதவி நீக்கததிற்கும் ஆளாகுவேன் என்பதையும் நான் அறிவேன்.

திகதி : ————. விண்ணப்பதாரின் ஒப்பம்.

6–224—11.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,910

---

## இலங்கைப் பரீட்சைப் பகுதி

**அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கான சிங்களத் தேர்ச்சிப் பரீட்சை—ஆகஸ்ட் 1970**

மேற்படி பரீட்சை 1970 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 8 ம், 15 ம், திகதிகளில் நடைபெறும். இப்பரீட்சைக்குத் தோற்றும் உத்தியோகத்தர் கள் தங்கள் விண்ணப்பங்களை 1970 ம் ஆண்டு யூலை மாதம் 5 ம் திகதிக்கு முன்னர் அவ்வப் பகுதித் தலைவர்களுக்கூடாக/உள்ளூர் அலுவலகத் தலைவர்களுக்கூடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

கே. ரீ. டபிள்யூ. சுமணசூரிய,
பரீட்சாதிகாரி.

பரீட்சைப் பகுதி,
கொழும்பு 2,
யூன் 2, 1970.

6–196—11.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,910

---

# கேள்விப் பத்திர அறிவித்தல்கள்

## தரைப்படை தலைமை நிலையம்

1970 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 1 ம் திகதி தொடக்கம் 1971 ஆம் ஆண்டு செத்தம்பர் மாதம் 30 ம் திகதி வரையில் கீழ்க்குறிப்பிடப் பட்டவைகளை விநியோகஞ் செய்வதற்குக் கேள்விப்பத்திரங்கள் கோரப் படுகின்றன :—

(அ) கொழும்பு, தியத்தலாவை, திருகோணமலை, பணைகொடை, அம் பாரை, கடுக்குறுந்தை, கந்தளை, உடவளவை, பதவிய ஆகிய இடங்களில் உள்ள தரைப்படை ஸ்தாபனங்களுக்குச் சேர்ந்த வைத்தியசாலைகளினது துணிகளையும் படைவீரர்களின் உடைகளைச் சலவை செயவதற்கும்.

(ஆ) தியத்தலாவையில் உள்ள தரைப்படை ஸ்தாபனங்களின் மலகூட சேவைகள் செய்ய தொழிலாளரை விநியோகிப்பதற்கும்.

ஆன கேள்விப்பத்திரங்கள் 1970 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 28 ம் திகதி பகல் 10 மணிவரை கொழும்பு, பாலதக்ச மாவத்தையில் உள்ள தரைப் படைத் தலைமை நிலையத்தில் கேள்விச்சபைத் தலைவரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

திருப்பிக் கொடுக்கப்படும் கட்டுப்பணம் ஆன ரூபா 75/ஐ (காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது) தனித்தனி ஒவ்வோர் மேற்கூறப்பட்ட விநியோகக் கேள்விகளுக்குத் தரைப்படைத் தலைமை நிலையத்தில் உள்ள சிவில் பரிபாலன அதிகாரியும் கணக்காளரும் என்பவரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். மேற்கூறப்பட்டுள்ள விநியோகக் கேள்விப் பத்திரங்கள் 1970 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 27 ம் திகதி பகல் 12 மணிவரை தரைப்படைத் தலைமை நிலையத்தில் வழங்கப்படும். மேலதிக விபரங்களை கொழும்பு, பாலதக்ச மாவத்தையில் உள்ள தரைப்படைத் தலைமை நிலையத்தில் இருந்த பெற்றுக் கொள்ளலாம்.

டி. எஸ். ஆடிகல,
மேஜர்–ஜெனரல்,
தரைப்படைத் தளபதி.

தரைப்படைத் தலைமை நிலையம்,
தபால் பெட்டி இலக்கம் 553,
கொழும்பு,
1970 ஆண்டு ஜுன் மீ 5 ந் உ.

6–283—11.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,910.

## அஞ்சல் தந்தித் திணைக்களம்

கொழும்பு 1, அஞ்சல் தந்தித் தலைமை அலுவலகத்தின் மேலதிக மாவட்ட கேள்விப்பத்திர சபைத்தலைவரால், 1970 யூன் 25 ம் திகதி மு. ப. 10.00 மணிவரை கீழ் கூறப்படும் வேலைகளுக்கு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :

(1) பெல்மதுளை அஞ்சல் அலுவலகத்தின் பொது அலுவலகத்தை விஸ்தரித்தல்.

(2) இறக்குவானை அஞ்சல் அலுவலகத்தை திருத்தம் செய்தல்.

(3) கேகாலை அஞ்சல் அலுவலகத்தின் வாசலை அகலமாக்குதல்.

2. ரூபா 10,000 க்கும் அதற்குக் கூடுதலான தொகைக்கும் பதிவு செய்யப்பட்ட அரசாங்க ஒப்பந்தகாரர்கள் மாத்திரமே இவ்வேலைகளுக்காக கேள்விப்பத்திரங்கள் அனுப்புவதற்குத் தகைமையுடையவராவர்.

3. ஒவ்வொரு வேலைக்கும் கேள்விப்பத்திர வைப்புப்பணமாக ரூபா 25 கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டைச் சமர்ப்பிப்பவர்களுக்கே இரத்தினபுரி அஞ்சல் அலுவலகங்களின் பெரும்பாக அத்தியட்சர் 1970 யூன் 18 ம் திகதி வரை கேள்விப்பத்திரங்களை வழங்குவார். இரத்தினபுரி அல்லது கேகாலை அஞ்சல் அலுவலகங்களில் கேள்விப்பத்திர வைப்புப்பணம் வைப்பில் இடல் வேண்டும்.

4. கொழும்பு 1, அஞ்சல் தந்தித் திணைக்களத்தின் தலைமை அலுவலகக் கட்டிடத்திலுள்ள, மேலதிக மாவட்ட கேள்விப்பத்திர சபைத்தலைவருக்கு கேள்விப்பத்திரங்கள் இரட்டைப் பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, பதிவு அஞ்சலில் அனுப்பிவைத்தல் வேண்டும். வேலையின் பெயரானது உறையின் மேல் இடக் கைப்பக்க மூலையில் தெளிவாக எழுதப்படல் வேண்டும்.

5. கேள்விப்பத்திரத்தில் ஏதாவது திருத்தம், வெட்டுதல், அழித்தல் ஏற்படுமேயாயின் அவைகள் கேள்விப்பத்திரதாரரால் முதலெழுத்து தொப்பமிடப்படல் வேண்டும்.

6. மேலதிக விபரங்கள் இரத்தினபுரி அஞ்சல் அலுவலகங்களின் பெரும்பாக அத்தியட்சரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

வேணண் அபயசேகரா,
அஞ்சல் அதிபர் நாயகமும் தந்திப்போக்கு வரத்து அதிபரும்.

6-147—11.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,910

---

## இலங்கை மின்சாரச் சபை

### பாவிக்கத் தகுதியற்ற மோட்டார் வாகனங்கள் விற்பனைக்கான கேள்விப்பத்திரம்

கொழும்பு 2, (த. பெ. இல. 540) இல் உள்ள இலங்கை மின்சாரச் சபையின் கேள்விச்சபைத் தலைவரால் மேற்படி விற்பனைக்கான கேள்விப் பத்திரங்கள் 1970 ம் ஆண்டு யூலை மாதம் 12 ம் திகதி முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விக்குரிய விண்ணப்பப்பத்திரங்கள் சேர் சிற்றம்பலம் காடினர் மாவத்தையிலுள்ள கொந்திராத்து–சப்ளை இஞ்சினியர் காரியாலயத்தில் பார்வையிடக் கிடைக்கும். கேள்விப்பத்திரக் கட்டுப்பணம் ரூபா 100 உம், கேள்விப்பத்திரக் கிரயம் ரூபா 5 உம் வெவ்வேறாக இலங்கை மின்சாரச் சபை சிறுப்பரிடம் கட்டி அவரிடமிருந்து இரண்டு பற்றுச் சீட்டுக்களைப் பெற்று, கொந்திராத்து–சப்ளை இஞ்சினியர் காரியாலயத்தில் காட்டியபின் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். கேள்வி நிபந்தனைகளின்படி கட்டுப்பணம் ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும்.

3. மேற்குறித்தபடி பெற்றுக்கொண்ட பத்திரத்திலேயே கேள்விகளை அனுப்புதல் வேண்டும். 1970 ம் ஆண்டு யூலை மாதம் 9 ம் திகதி பிற்பகல் 2 மணி மட்டும் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

4. 1970 ம் ஆண்டு யூலை மாதம் 12 ம் திகதி முற்பகல் 10.00 மணியளவில் மேற்படி கேள்விச்சபைத் தலைவர் காரியாலயத்தில் கேள்விப் பத்திரங்கள் திறக்கும் பொழுது கேள்விக்காரர்கள் சமுகமாயிருக்கலாம்.

ரீ. டபிள்யூ. மெண்டிஸ்,
பொது முகாமையாளர்,
இலங்கை மின்சாரச் சபை.

த. பெ. இல. 540,
கொழும்பு 2,
11.6.1970.

6-172—11.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,910

---

## தொழிற்றிணைக்களம்

### ஒப்பந்தப் புள்ளி அறிவித்தல்

நாரன்பிட்டியிலுள்ள புதிய தொழிற் செயலகத்திற் பொருள்களை வழங்குவதற்கும், ஊர்திச் சாலைகளை அமைத்தற்கும் 1970 ம் ஆண்டு யூன் மாதம் 25 ந் தேதி காலை 10 மணிவரைக்கும், கொழும்பு தொழிற்றிணைக்களத்தைச் சேர்ந்த ஒப்பந்தப் புள்ளிச் சபையின் தலைவர் ஒப்பந்தப் புள்ளிகளை ஏற்றுக்கொள்வர்.

2. ஒப்பந்தப் புள்ளிகள் திறந்துபார்க்கப்படும் சமயத்திற் சமுகமளித்தற்கு ஒப்பந்தக்காரர் அனுமதிக்கப்படுவர். ஒப்பந்தப் புள்ளிகள் கொழும்பு 5, தொழிற் செயலகத்தின் 2 ம் (வட சார்) மாடியில் தொழில் ஆணையாளர் அலுவலகத்தில் 1970 ம் ஆண்டு யூன் மாதம் 25 ந் தேதி காலை 10 மணிக்குத் திறக்கப்படுவனவாகும்.

3. கொழும்பு–5, தொழிற் செயலகத்தின் 3 ம் (வட சார்) மாடியில், தொழிற்றிணைக்களத்துத் தலைமைக் கணக்காளருக்கு விண்ணப்பித்து 1970 ம் ஆண்டு யூன் மாதம் 23 ம் தேதியன்று நண்பகல் 12 மணி வரைக்கும் பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் ஒப்பந்தப் புள்ளிகள் அனுப்பப்படுதல் வேண்டும்.

4. ஒப்பந்தப் புள்ளிகள் யாவும் இரு பிரதிகளில் அனுப்பப்படுதல் வேண்டும். ஒப்பந்தப் புள்ளிகள் அனுப்பப்படும் கடித உறையின் இடது மேற்புற மூலையில் "புதிய தொழிற் செயலகக் கட்டடத்தில் ஊர்திச் சாலைகளை அமைக்கும் வேலைக்கு ஒப்பந்தப் புள்ளிகள்" என்று குறிக்கப்படுதல் வேண்டும்.

5. ஒப்பந்தப் புள்ளிகள் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படலாம். உள்ளூர் ஒப்பந்தகாரரொருவர் இவ்வண்ணம் தமது ஒப்பந்தப் புள்ளிகளை அனுப்ப விரும்பாவிடின் அவர் அல்லது அவரது முகவர் (மேலே 4 ம் பந்தியிற் குறிக்கப்பட்ட விவரங்களும் ஒப்பந்தகாரரின் முகவரியும் கூறப்படவேண்டியதான கடித உறையில்) முத்திரையச்சு இடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளை, அவற்றை ஏற்று ஏற்புரை வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட பிரதித் தொழில் (நிருவாகம்) ஆணையாளரிடம் கொழும்பு–5 தொழிற் செயலகத்திலுள்ள தொழிற்றிணைக்களத்தில் நேரிற் கொடுக்கலாம்.

6. ஒப்பந்தப் புள்ளிப் படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர், ரூபா 1,000 ஒப்பந்தப் புள்ளிக் கட்டுப் பணமாகச் செலுத்தி, கொழும்பு 5 தொழிற் செயலகத்திலுள்ள தொழிற்றிணைக்களத்தில், பிரதம கணக்காளர் அலுவலகத்திலிருந்து பெற்ற பற்றுச் சீட்டொன்றைக் காண்பித்தல் வேண்டும்.

7. சகல வரைப் படங்களையும், பொருட் பட்டியல்களையும், கொழும்பு–5 தொழிற் செயலகத்திலுள்ள பிரதித் தொழில் ஆணையாளர் (தொழினுட்பம்) அலுவலகத்திற் பார்வையிடலாம்.

8. மேலும் தேவைப்படும் விவரங்களையும் நிபந்தனைகளையும் கொழும்பு–5 தொழிற் செயலகத்திலே, பிரதித் தொழில் ஆணையாளர் (தொழினுட்பம்) அவர்களுக்கு விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆர். எல். குணசேகர,
தொழில் ஆணையாளர்.

தொழிற்றிணைக்களம்,
கொழும்பு–5,
1970 ம் ஆண்டு யூன் மாதம் 1 ந் தேதி.

6-159—11.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,910

## வித்தியா பகுதி

கீழ்ககாணும் வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் 1970 ம் ஆண்டு ஜூலை மாதம் 5 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு. ப. 10 30 மணிவரை யாழ்ப்பாண வடபெரும்பாக கல்வித் திணைக்களக் கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

| பாடசாலைப் பெயர்கள் | வேலை விபரங்கள் |
|---|---|
| (1) யா/பலாலி ஆசிரியர் கலாசாலை | போதனசாலை அமைத்தல். கட்டடம் இல. 2. |
| (2) ஷை | போதனசாலை அமைத்தல். கட்டடம் இல. 3. |
| (3) ஷை | விவசாய இரசாயனசாலை அமைத்தல் |
| (4) யா/கோப்பாய் மகளிர் ஆசிரியர் கலாசாலை | நூலகக் கட்டிடம் அமைத்தல். |

மாவட்ட குறுக்கம் : யா—யாழ்ப்பாண மாவட்டம்

குறிப்பு :—பதிவுத் தகைமை

மேற்கூறிய 1ம் வேலைக்கு ரூபா 40,000 மும் அதற்கு மேலும்
மேற்கூறிய 2ம் வேலைக்கு ரூபா 27,000 மும் அதற்கு மேலும்
மேற்கூறிய 3ம் வேலைக்கு ரூபா 16,000 மும் அதற்கு மேலும்
மேற்கூறிய 4ம் வேலைக்கு ரூபா 46,000 மும் அதற்கு மேலும்

2. இவ்வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் குறிப்பில் கொடுக்கப்பட்ட தொகைகளுக்கு கல்வி அமைச்சில், பொது வேலைப்பகுதியில் அல்லது நீர்ப்பாசன திணைக்களத்தில் பதியப்பட்டவர்களுக்கு 1970 ம் ஆண்டு ஜூலை மாதம் 4ம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிவரை வடபெரும்பாக கல்வியதிபதி அவர்களால் வழங்கப்படும் (நீர்ப்பாசன திணைக்களத்தில் ரூபா 15,000க்கும் அதற்கு குறைந்த தொகைக்கும் பதியப்பட்டவர்கள் மேற்படி வேலைகளுக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர் அல்லர்). இவ்வேலைகளுக்கு ரூபா 100 கொழும்பு கல்வி அமைச்சு அலுவலகத்திலோ அல்லது வடபெரும்பாக கல்வித்திணைக்களத்திலோ அல்லது கொழும்புக்கு வெளியேயுள்ள எக் கச்சேரியிலோ கட்டியதாக பற்றுச் சீட்டு, வடபெரும்பாக வித்தியாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். காசோலை, மணியோடர், போஸ்ரலோடர் ஆகியன ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. கேள்விப்பத்திரங்களுக்கான காசு கட்டுவதற்குரிய பத்திரங்கள் கொழும்பு 2 மலாய் வீதியிலுள்ள கல்வி அலுவலகள் அமைச்சின் நிரந்தரச் செயலாளரின் அலுவலகத்துப் பாடசாலை வேலைகள் கிளையிலிருந்து அல்லது வடபெரும்பாக கல்வியதிபதியின் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். குறிப்பில் காண்பிக்கப்பட்டபடி பதியப்பட்டதாக அத்தாட்சி காண்பிப்பவர்களுக்கு மாத்திரமே பணமிடும் பத்திரம் வழங்கப்படும்

3. நீர்ப்பாசனத் திணைக்களத்தில், பொதுவேலைப்பகுதியில் அல்லது கல்வி அமைச்சில் குறிப்பில் கொடுக்கப்பட்ட தொகைகளுக்கு பதியப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் இவ்வேலைகளுக்கு விண்ணப்பிக்க முடியும். அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் இடுபணம் செலுத்துவதிலிருந்து விலக்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படுமுன் குறிப்பில் கொடுக்கப்பட்ட தொகைகளுக்கு பதியப்பட்டதாக அவை அத்தாட்சி காண்பித்து கேள்விப்பத்திர படிவங்களை பெற்றுக்கொள்ளலாம்.

4. 2ம், 3ம் பந்தியில் குறிப்பிட்டபடி வடபெரும்பாக வித்தியாதிபதியிடமிருந்து பெறக்கூடிய கேள்விப்பத்திரங்கள் இரட்டைப் பிரதிகளில் அவரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். அக்கந்தோரிலிருந்து வேண்டிய மாதிரிப்படமும் பிறவிபரங்களும் அறியலாம். கேள்விப்பத்திரங்கள் பதிவுசெய்து தபால்மூலம், தலைவர், கேள்விச்சபை, வடபெரும்பாக கல்வித் திணைக்களம், 153, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசமிட்டு அனுப்பப்படவேண்டும். உள்ளூர் விண்ணப்பகாரர்கள் கேள்விப்பத்திரங்கள் தபாலில் அனுப்ப விரும்பாவிடின் விண்ணப்பகாரரோ அல்லது அவரின் பிரதிநிதியோ தமது கேள்விப்பத்திரங்களை அடையாள முத்திரையிட்டு யாழ்ப்பாண கல்வித்திணைக்கள நிர்வாக உதவியாளரிடம் கொடுத்து பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ளல் வேண்டும். மேலுறையில் விண்ணப்பக்காரரின் பெயர், விலாசம் முதலியன குறிப்பிடப்பட வேண்டும்.

5. 1970ம் ஆண்டு ஜூலை மாதம் 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் யாழ்ப்பாண, 153, ஆஸ்பத்திரி வீதியிலுள்ள வடபெரும்பாக கல்வித் திணைக்களத்தில் திறக்கப்படும். விண்ணப்பக்காரர்கள் இவ்வேளையில் அங்கு பிரசன்னமாய் இருக்கலாம். அவர்களுக்கு கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்தவர்களின் பெயர்களும் தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும்.

6. கேள்விப்பத்திரங்களை பெறும் திகதி முடிவடைந்தபின் ஆறு வாரங்களுக்கு தமது கேள்வியை அமுலில் வைக்க வேண்டுமென்று கேள்விப்பத்திரம் சமர்ப்பிப்போர் வேண்டப்படுவர்.

7. யாழ்ப்பாண வடபெரும்பாக கல்வித் திணைக்கள பாடசாலை வேலைகள் கிளையில் பரிசீலனைக்கென கேள்விப்பத்திரங்கள் கிடைக்கக்கூடியதாக இருக்கும்.

8. இக் கேள்விப்பத்திரங்களுக்கு 30.9.1966க்கு முன் கல்வித் திணைக்களத்தால் பதியப்பட்ட ஒப்பந்தகாரப் பதிவுகள் கல்வி, கலாச்சார அமைச்சினால் பதிவு செய்யப்பட்டதாகக் கருதப்படும்.

சி. தணிகாசலம்,
கல்வியதிபதி,
வட பெரும்பாகம், யாழ்ப்பாணம்.

கல்வித் திணைக்களம்,
153, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
1970.6.2

6–262—11.6.70 ந் திகதிய வர்த்தமானி இல 14,910

---

## வித்தியா பகுதி

கீழே குறிப்பிட்டுள்ள வேலைக்கு மட்டக்களப்பு கல்விக் கந்தோர் கேள்விச் சபைத் தலைவரால் 1970 ஆம் ஆண்டு ஆடி மாதம் 2 ந் திகதி மு. ப.10.30 மணிவரை கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| பாடசாலைப் பெயர் | வேலையின் தன்மை |
|---|---|
| 1. ஹாடி தொழில் நுட்பக் கல்லூரி அம்பாறை | பொறியியல் பகுதிக் கட்டடக்கூரைக்கு சீலிங் அடித்தல். |
| 2. அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மட்டக்களப்பு | திருத்த வேலைகள் |
| 3. அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அட்டாளைச்சேனை | திருத்த வேலைகள் |

2. கல்வி கலாச்சார அலுவல்கள் அமைச்சில், அரசாங்க வேலைப் பகுதியில் அல்லது நீர்ப்பாசனப் பகுதியில் 1 ம் வேலைக்கு ரூ. 25,000 மும், அதற்கு மேலும் 2 ம் வேலைக்கு ரூ. 15,000 மும் அதற்கு மேலும், 3ம் வேலைக்கு ரூ. 10,000 மும் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்டுள்ளவர்களுக்கு, (ரூ. 15,000 க்குக் குறைந்த வேலைகட்கு, நீர்ப்பாசன பகுதியில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் கேள்விகள் அனுப்புவதற்கு தகுதியற்றவர்) அவர்கள் கொழும்பு 2, கல்வி கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியின் காரியாலயத்தில் அல்லது மட்டக்களப்புப் பிரதேச வித்தியாதிபதியின் அலுவலகத்தில் அல்லது கொழும்புக்கு வெளியே உள்ள எக்கச்சேரியிலேனும் ஒவ்வொரு வேலைத் தொடர்பிலும் ரூ. 100 கட்டுப்பணம் செலுத்தியதற்காய பற்றுச்சீட்டை மட்டக்களப்புப் பிரதேச வித்தியாதிபதிக்கு சமர்ப்பிக்குமிடத்து 1970 ஆம் ஆண்டு ஆடி 1ந் திகதி நண்பகல் 12 மணிவரை கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும். கேள்விக் கட்டுப்பணங்கள் கட்டுவதற்கான பணங்கட்டும் நறுக்குகள் கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியாதிரிசியின் அலுவலகத்து பாடசாலை வேலைகள் கிளையிலிருந்து அல்லது மட்டக்களப்பு பிரதேச வித்தியாதிபதியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். காசோலைகள், காசுக்கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. மேலே குறிப்பிட்டுள்ள தொகைகளுக்கு தாம் பதிவுசெய்யப்பட்டுள்ளவர்களென சான்று சமர்ப்பிப்பவர்களுக்கு மட்டுமே பணங்கட்டும் நறுக்குகள் கொடுக்கப்படும்.

3. மேற்போந்த 2 ம் பந்தியில் குறிப்பிட்டுள்ள தொகைகளுக்கு நீர்ப்பாசனப் பகுதி, அரசாங்க வேலைப்பகுதி அல்லது கல்வி கலாச்சரா அலுவல்கள் அமைச்சில் பதிவு செய்யப்பட்டுள்ளதற்கமைய அங்கீகரிக்கப்பட்டுள்ள சங்கங்களும் இவ்வேலைக்குக் கேள்விகள் அனுப்பலாம். அங்கீகரிக்கப்பட்டுள்ள சங்கங்கள் கேள்விக் கட்டுப்பணம் கட்டுவதிலிருந்து தவிர்வு அளிக்கப்பட்டுள்ளன. கேள்விப் பத்திரம் வழங்கப்படுமுன் இச்சங்கங்கள் 2 ம் பந்தியில் குறிப்பிட்டுள்ள தொகைகளுக்குத் தாம் பதிவு செய்யப்பட்டுள்ளவையென சான்று சமர்ப்பிக்க வேண்டும்.

4. மேற்போந்த 2ம், 3ம், பந்திகளில் காட்டியுள்ள பிரகாரம் மட்டக்களப்புப் பிரதேச வித்தியாதிபதியிடம் இருந்து பெற்றபாலனவாகிய படிவங்களில், இரட்டைப் பிரதியில் கேள்விகள் அனுப்பப்படவேண்டும். இவரிடமிருந்து சகல விபரங்களும், தகவல்களும் பெற்றறுக்கொள்ள முடிவதுடன் வேலை பற்றிய மாதிரிப் படங்களையும் இவருடைய அலுவலகத்தில் பார்வையிடலாம். அஞ்சல் மூலம் அனுப்பப்படும் கேள்விப் பத்திரங்கள் மட்டக்களப்பு கல்விக் கந்தோர் கேள்விச் சபைத்தலைவரின் விலாசத்துக்கு பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும். ஸ்தல கேள்வியாளர்கள் தமது கேள்விப் பத்திரங்களைப் பதிவு அஞ்சல் மூலம் அனுப்பாதவிடத்து அவர்கள் அல்லது அவர்களுடைய முகவர்கள் காகித உறைகளில் வைக்கப்பட்டு பொறியிடப்பட்டு கேள்விப் பத்திரங்களை மட்டக்களப்பு வித்தியா கந்தோரின் அலுவலக உதவியாளரிடம் நேரிற் கொடுத்து, அவர் அதைப் பெற்றுக்கொண்டமைக்கான ஒரு கடிதத்தை அவரிடமிருந்து பெறவேண்டும். குறித்த காகித உறையின் மேற்பக்கத்தில் கேள்வி என்ன வேலை சம்பந்தமானதெனவும், கேள்வியாளரின் பெயரும் விலாசமும் கொடுபட வேண்டும்.

5. கேள்விப் பத்திரங்கள் மட்டக்களப்பு வித்தியா கந்தோரில் 1970ம் ஆண்டு ஆடி மாதம் 2ந் திகதி மு. ப. 10.30 மணிக்குத் திறக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளர்கள் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படுவர். கேள்விப் பத்திரங்களைத் திறக்கும்போது அங்கு பிரசன்னமாயிருக்கும் கேள்வியாளருக்குக் கேட்கக்கூடியதாக கேள்வியாளர்கள் பெயரையும் அவர்கள் கோரியுள்ள வீதங்களையும் வாசிப்பார்.

6. கேள்விகள் முடிவடையும் திகதியிலிருந்து 6 வார காலம் வரை தாம் கோரிய விகிதங்களின்படி வேலையை மேற்கொள்ள ஒப்புக்கொள்ளவேண்டும்.

7. மேலும் தேவைப்படும் விபரங்கள் மட்டக்களப்புப் பிரதேச வித்தியாதிபதியின் கந்தோரிலிருந்து பெற்றுக்கொள்ளப்படலாம். அங்கே கேள்விகள் சம்பந்தமான பத்திரங்களையும் பார்வையிடலாம்.

8. 30.1.1966க்கு முன்னர் பாடசாலை வேலைகட்கென வித்தியா பகுதியால் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் இக்கேள்வி அறிவித்தலின் நோக்கத்துக்காக கல்வி கலாச்சார அலுவல்கள் அமைச்சால் பதிவு செய்யப்பட்டுள்ளவராகக் கருதப்படுவர்.

வெ. சங்கரலிங்கம்.
வித்தியாதிபதி (கிழக்குப் பிரதேசம்).

வித்தியா கந்தோர்,
மட்டக்களப்பு, 2.6.70.

6—263—11.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,910

---

## கமத்தொழில் திணைக்களம்

### அரசாங்கப் பண்ணைகளில் வெற்று நைலோன் பசளைப் பைகள், மிருக உணவு வெற்றுச் சாக்குப் பைகள், பெரிய அளவிலான கோழித்தீன் வெற்றுப் பைகள் ஆகியன விற்பனைக்கான கேள்விகள் கோரப்படுகின்றன

மேல்வரும் பண்ணைகளில் கீழ்க் கொடுக்கப்படும் அளவுகளையுடைய கோழித்தீன், மிருக உணவு, சாக்குப் பைகள், பசளைப் பைகள் (நைலோன்) ஆகியவை விற்பனைக்கான கேள்விப் பத்திரங்கள் கமத்தொழில் அதிகாரியினால் (யாழ்ப்பாணம் கமத்தொழில் பண்ணை முகாமையும் ஆக்கமும்) கந்தோரில் 1970.6.29 ஆம் திகதி முற்பகல் 10 மணி வரையும் ஏற்றுக் கொள்ளப்படும்.

| | | |
|---|---|---|
| (அ) கமத்தொழிற் பண்ணை, திருக்கணுமலை :— | | |
| | (1) வெற்றுச் சாக்குப்பை I ந் தரம் .. .. | 400 |
| | வெற்றுச் சாக்குப்பை II ந் தரம் .. .. | 600 |
| | வெற்றுச் சாக்குப்பை III ந் தரம் .. .. | 1,200 |
| | (2) பெரிய அளவிலான கோழித்தீன் வெற்றுப் பைகள் .. | 1,500 |
| | (3) வெற்று நைலோன் பசளைப் பை .. .. | 7 |
| (ஆ) நெற்கமம், பரந்தன் :— | | |
| | (1) வெற்று நைலோன் பசளைப் பை .. .. | 370 |
| (இ) கமத்தொழிற் பண்ணை, கரடியனாறு :— | | |
| | (1) வெற்று நைலோன் பசளைப் பை .. .. | 280 |
| (ஈ) நெற்கமம், கந்தளாய் :— | | |
| | (1) வெற்று நைலோன் பசளைப் பை .. .. | 122 |
| (உ) கமத்தொழிற் பண்ணை, கிளிநொச்சி :— | | |
| | (1) வெற்று நைலோன் பசளைப் பை .. .. | 247 |
| (ஊ) கமத்தொழிற் பண்ணை, முருங்கன் :— | | |
| | (1) வெற்று நைலோன் பசளைப் பை .. .. | 8 |
| | (2) வெற்றுப் பசளைச் சாக்குப் பை .. .. | 100 |

2. கேள்விக்காரர்களுக்கு, கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்குமுன் காரியாலய நேரத்தில் பண்ணைக்குச் சென்று பண்ணை முகாமையாளரின் முன்னிலையில் மேற்குறிப்பிட்ட பொருட்களைப் பரீட்சார்த்தமாகப் பார்வையிடுவதற்கு அனுமதியுண்டு. ஒவ்வொரு பொருளுக்கும் தனித்தனியாகப் பெறுமதி குறிப்பிடப்பட வேண்டும்.

3. கேள்வி முடிவுத் திகதிக்கு முன்தினம் நண்பகல் 12 மணி வரையும் யாழ்ப்பாணக் கமத்தொழில் அதிகாரியினால் (ப. மு. ஆ.) கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும். கேள்வி ஒன்றுக்கு ரூபா 10 வைப்புப் பணமாகச் செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்துக் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். வைப்புப் பணம் பேராதனை கமத்தொழில் திணைக்களத்திலோ அல்லது எந்த ஒரு அரசாங்கச் செயலகத்திலோ செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெறலாம்.

4. கேள்விப்பத்திரங்கள் இரட்டைப் பிரதியில் தயாரிக்கப்பட்டுப் பதிவுத் தபால் மூலம் கமத்தொழில் அதிகாரி (ப. மு. ஆ.), கமத்தொழிற் கந்தோர், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்புவதுடன் உறையின் இடது பக்க மேல் மூலையில் " அரசாங்கப் பண்ணைகளில் வெற்றுச் சாக்குப் பைகள், நைலோன் பசளைப் பைகள் ஆகியன விற்பனைக்கான கேள்விகள் " எனக் குறிப்பிட வேண்டும்.

5. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் பண்ணை முகாமையாளர்களால் குறிக்கப்படும் திகதியில் முழுப் பணத்தையும் செலுத்திப் பண்ணை முகாமையாளரிடமிருந்து பொருட்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும். குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் குறிக்கப்பட்ட தொகைப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளத் தவறின் அவற்றை வேறு முறையில் விற்பதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் அவருடைய வைப்புப் பணம் அரசாங்கத்தால் பறிமுதலாக்கப்பட்டு அவருடைய பெயர் கொந்தராத்துக்காரர்களின் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுத் தாமத வேலை செய்யும் கொந்தராத்துக்காரர்களின் பட்டியலில் சேர்க்கப்படும். அத்துடன் அவரிடமிருந்து வேறு ஏதும் அறவீடு செய்வதற்கு அரசாங்கத்திற்கு எவ்வித தடையும் இல்லை.

6. இது சம்பந்தமாக மேலதிக விபரங்களுக்கு ஒவ்வொரு பண்ணை முகாமையாளர்களிடமிருந்து நேரிலோ எழுத்துமூலமோ பெற்றுக்கொள்ள முடியும்.

எம். எல். சி. இலங்ககோன்,
பிரதிக் கமத்தொழில் அத்தியட்சகர்.

பேராதனை,
1970 ம் ஆண்டு ஜூன் மீ 1 ந உ

6—210—11.6.70 ந திகதிய வர்த்தமானி இல. 14,910

---

## அஞ்சல் தந்தித் தொலைசெய்திப் போக்குவரத்துத் திணைக்களம்

### தந்திக் கம்பங்களை சேகரித்து, எடுத்துச் சென்று ஒப்படைப்பதற்கான கூறுவிலைகள்

பேலியகொடை, நீர்கொழும்பு வீதி, 103 ம் இலக்கத்திலுள்ள செற்ராக் (சிலோன்) லிமிரெட் வேலைக்களத்திலிருந்து தந்தி மரக்கம்பங்களைச் சேகரித்து, ஏற்றிச் சென்று ரொறிங்டன் சதுக்கத்திலுள்ள அஞ்சல் தந்தித் தொலை செய்திப் போக்குவரத்துக் களஞ்சியத்தில் இறக்கி ஒப்படைப்பதற்கான கூறுவிலைகள் இத்தால் கோரப்படுகின்றன.

2. ஏற்றிச் செல்லப்பட வேண்டிய கம்பங்களின் விவரங்கள் பின்வருமாறு :

நீளம்—18 அடி
தொகை—2000.

3. கம்பமைல் கணக்கில் கம்பங்களை ஏற்றுதல், கொண்டு செல்லல், இறக்குதல், ஒப்படைத்தல் ஆகியவற்றுக்கான கட்டணங்களை குறிப்பிடுதல் வேண்டும். பிரதான தந்தித்தொலை செய்திப்போக்குவரத்துப் பொறியியலாளர் கேள்விப்பத்திரத்தை ஏற்றுக் கொண்டதாக அனுப்பும் அறிவித்தல் கிடைத்த மூன்று கிழமைகளுக்குள் முழு வேலையும் செய்து முடித்தல் வேண்டும். கூறுவிலையின் பெறுமதியையும் குறிப்பிடுதல் வேண்டும்.

4. கூறுவிலைகளை அனுப்பும் உறையின் இடது கை மேல் மூலையில் " கம்பங்களை ஏற்றிச் செல்வதற்கான கூறுவிலைகள் " எனக்குறிப்பிட்டு 1970 ஜூலை 1 ஆம் திகதி மு. ப. 10.00 மணிக்குப் பிந்தாமல் கொழும்பு 1, கோட்டை, லோட்டஸ் ரோட், அஞ்சல் தந்தித்தொலை செய்திப் போக்குவரத்து தலைமை அலுவலகக் கட்டிடம், 5 வது மாடி' பிரதான தந்தித் தொலைசெய்திப் போக்குவரத்துப் பொறியியலாளரை அடையக்கூடியதாக பொறியிடப்பட்ட பதிவுக்கடிதத்தில் அனுப்புதல் வேண்டும் அல்லது குறிப்பிடப்பட்டுள்ள அலுவலகத்திலுள்ள கேள்விப் பத்திரப் பெட்டியிலும் போடலாம். கூறுவிலைகள் அதே நாளில் மு. ப. 10.30 மணிக்குத் திறக்கப்படும் (1.7.1970).

5. பிரதான தந்தித் தொலை செய்திப் போக்குவரத்துப் பொறியியலாளரின் அலுவலகத்தில், கூறுவிலைகள் திறக்கப்படும் பொழுது விண்ணப்பதாரர்கள் சமூகமளிக்கலாம்.

6. அலுவலக நேரத்தில் (மு.ப. 9.30—பி. ப. 4.00 மணிவரை) பிரதான தந்தித் தொலைசெய்திப் போக்குவரத்துப் பொறியியலாளரின் அலுவலகத்தில் மேலும் விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

வி. அழகரத்தினம்,
பிரதான தந்தித் தொலை செய்திப்
போக்குவரத்துப் பொறியியலாளர்.

அஞ்சல் தந்தித் தொலை செய்திப்போக்குவரத்து தலைமை அலுவலகம்,
லோட்டஸ் ரோட்,
கோட்டை,
கொழும்பு 1,
1970 ம் ஆூ ஜூன் மீ 5 ந வ

6–288—11.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,910.

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்—கல்முனை உபபிரிவு

பின்வரும் வேலைக்கான கேள்விப் பத்திரங்கள் கிழக்குப் பிரிவு, மட்டக்களப்பு பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளர் அவர்களால் 1970 ம் ஆண்டு ஜூலை மாதம் 5 ம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்பட்டு இதே தினத்தன்று காலை 10.05 மணிக்குத் திறக்கப்படும்.

| வேலை விபரம் | பதிவுத் தொகை ரூ. ச. | பதிவுக் கட்டணம் ரூ. ச. |
|---|---|---|
| கல்முனை உபபிரிவு மணற்பிட்டி ஆற்றுத்திட்டத்தில் மாவடி அணைக்கட்டு அமைத்துத் தரல் (மேலதிக வேலை) .. .. | 21,000 .. | 25 |
| கல்முனை உபபிரிவு பாலையடிவெட்டையில் நிலையான ஓவசியர் குடியிருப்புமனை அமைத்துத் தரல் .. .. .. | 19,500 .. | 25 |

அவ்வவ் வேலைக்கு எதிரே காட்டப்பட்ட அல்லது அவைக்கு மேற்பட்ட தொகைக்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பதியப்பட்டுள்ள ஒப்பந்தக் காரர்கள், கூட்டுறவுச் சங்கங்கள் கிராமாபிவிருத்திச் சங்கங்கள் மாத்திரமே கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

கேள்விப் பத்திரங்கள் கல்முனை, அம்பாரை, செங்கலடி உப நீர்ப்பாசன அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 1970 ம் ஆண்டு ஜூலை மாதம் 1 ம் திகதி பி. ப. 4.00 மணி வரையும் பெற்றுக் கொள்ளலாம். இப்படிவங்களின் இரு பிரதிகளில் கேள்விப்பத்திரங்கள் அனுப்பிவைக்கப் படல் வேண்டும். கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும் போது தனது பதிவுப் புத்தகத்துடன் தான் மேற்கொண்டுள்ள வேலைகளையும் அவற்றின் பெறுமதிகளையும் வெளிப்படுத்துதல் வேண்டும். இவை அவ் ஒப்பந்தக்காரர் கேள்விப் பத்திரம் வழங்கத் தகுதியானவரா என்பதைத் தீர்மானிக்க ஏதுவாயிருக்கும். கேள்விப் பத்திரங்கள் பதிவஞ்சல் மூலமாகவோ அல்லது இதற்கென மட்டக்களப்புப் பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியிலோ சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

படிவங்கள் பெறுமுன்னர் குறிப்பிட்ட வேலைக்கு எதிரே காட்டப்பட்டுள்ள தொகைக்கு பதிவுக் கட்டணத்தை நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்தில் கட்டவேண்டும் அல்லது ஒரு கசசேரியில் கட்டிய பற்றுச் சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

இக்கேள்வி சம்பந்தமாக மேலதிக விபரங்கள் வேண்டின் கல்முனை உபபிரிவு நீர்ப்பாசன அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் தொடர்பு கொள்ளவும். கேள்வி ஏற்கப்பட்டவுடனேயே வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 1970 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31 ம் திகதிக்கு முன்னர் வேலைகள் பூர்த்தியாக்கப்படல் வேண்டும். ஒவ்வொரு வார அல்லது வாரத்தின் ஒரு பகுதித் தாமதத்திற்கும் பொருந்திய நட்டமாக ரூபா 50 அறவிடப் படும்.

சி. சண்முகராசா,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
கல்முனை உபபிரிவு.

நீர்ப்பாசன அலுவலகம்,
கல்முனை,
1970 ம் ஆூ ஜூன் மீ 2 ந வ

6–275—11.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,910

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### திருகோணமலை உப–பிரிவு

பின்வரும் வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் திருகோணமலை பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளர் அவர்களால் 1970 ம் ஆண்டு ஆனி மாதம் 28 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிவரையும் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதன் பின்னர் உடனடியாகத் திறக்கப்படும்.

2. அவ்வவ் வேலைக்கு எதிரே காட்டப்பட்டுள்ள அல்லது அவைக்கு மேற்பட்ட தொகைக்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பதியப்பட்டுள்ள கொந்தராத்துக்காரர்கள், கூட்டுறவுச் சங்கங்கள், கிராமாபிவிருத்திச் சங்கங்கள் மாத்திரமே கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகைமை யுடையவராவர்.

| | வேலை விபரம் | பதிவுத் தொகை ரூபா | கேள்விப் பத்திரக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|
| (அ) | முதலிக்குளப் பகுதியிலிருந்து பன் மதவாச்சிக் குளத்திற்கு வாய்க் கால் அமைத்தல் .. | 20,000 .0 | 25 .0 |
| (ஆ) | திருக்கோணமலையிலுள்ள புறுக்ஸ் திடலில் கனிட்ட நுண்தொழில் உத்தியோகத்தர்களுக்கான விடுதி அமைத்தல் .. | 30,000 .0 .. | 50 .00 |
| (இ) | கொட்டுக்குளத்தில் நீர்ப்பாசன வசதி அளித்தல் .. | 20,000 .0 .. | 25 .0 |

3. கேள்விப் பத்திரங்கள் திருகோணமலை, அல்லை, கந்தளாய் ஆகிய இடங்களிலுள்ள நீர்ப்பாசன அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 1970 ம் ஆண்டு ஆனி மாதம் 24 ம் திகதி வரையும் பெற்றுக் கொள்ளலாம். கேள்வியாளராக முன்வருபவர் தமது பதிவுப் புத்தகத்துடன் இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலை விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தல் வேண்டும். இவை அவ்வொப்பந்தக்காரர் கேள்விப் பத்திரம் அனுப்பலாமா என்பதை அறிய ஏதுவாய் இருக்கும். வெற்றுப்பத்திரம் வழங்குமுன் மேற் காட்டிய நீர்ப்பாசனப் பொறியியலாளர் ஒருவரின் காரியாலயத்திலோ அல்லது கச்சேரியிலோ, மேற்காட்டிய கேள்விப்பத்திர கட்டணத்தைச் செலுத்தி பற்றுச் சீட்டுக் காட்டல் வேண்டும்.

4. இக்கேள்விக்கான மேலதிக விபரங்களை திருகோணமலை உப நீர்ப்பாசன அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

ஜீ. பி. போல்,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
திருகோணமலை உப பிரிவு.

உப-நீர்ப்பாசன அலுவலகம்,
திருகோணமலை,
2.6.1970.

6–281—11.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,910

# கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள்

## கேள்விப்பத்திர முடிவுகள்

| தொகை | விடயம் | முடிவடைந்த திகதி | கிடைக்கப் பெற்ற விலைக் குறிப்பீடுகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை | வழங்குபவர் | எந்த நாட்டின் உற்பத்தி | விலை |
|---|---|---|---|---|---|---|---|
| 1700நீ/தொன்.. | சுருள்களிலுள்ள பை களிற்கான கிராப்ற் கடதாசி | 12.2.70 .. | 18 .. | 425 நீ/தொ .. | மெசர்ஸ் ஜப்பான் பல்ப் அன் பேப்பர் கொம்பனி லிமிரெட், டோக்கியோ, ஜப்பான் | ஜப்பான் | ரூபா 1,091.92 நீ/தொ ஒன்று கொ.வி. மற்றும் க. கே. கொழும்பு |
| | | | | 275 நீ/தொ .. | மெசர்ஸ் ஒய் அல்கோ ஏபி பின்லாந்து | சுவீடன்.. | ரூபா 1,276.77 நீ/தொ ஒன்று கொ. வி. மற்றும் க. கே. கொழும்பு |
| | | | | 200 நீ/தொ .. | மெசர்ஸ் ஸ்கான்டினேவியன் ஓவர்சீஸ் பேப்பர் கொம்பனி, கோதென்பேக், சுவீடன் | அதே ஆலை சுவீடன்.. | ரூபா 1,276.68 நீ/தொ ஒன்று, கொ.வி. மற்றும் க. கே. கொழும்பு |
| | | | | 200 நீ/தொ .. | மெசர்ஸ் பேர்சிவொன் ஸ்கவுல்ஸ் கோதென்பேக், சுவீடன் | சுவீடன்.. | ரூபா 1,276.64 நீ/தொ ஒன்று கொ. வி. மற்றும் க. கே. கொழும்பு |
| | | | | 200 நீ/தொ .. | மெசர்ஸ் ஜான் லீபீக் லிமிரெட், கோதென்பேக், சுவீடன் | சுவீடன்.. | ரூபா 1,276.64 நீ/தொ ஒன்று கொ. வி. மற்றும் கப்பல் கேழ்வு, கொழும்பு |
| | | | | 400 நீ/தொ .. | மெசர்ஸ் பாக்ஹாமார்ஸ் புறுக், பாக்ஹாமார், சுவீடன் | சுவீடன்.. | ரூபா 1,277.18 நீ/தொ ஒன்று கொ. வி. மற்றும் க. கே, கொழும்பு |

356, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2,
1970 ம் ஆு மே மீ 22 ந உ.

தி. ப. நாரன்பனுவ,
பொது முகாமையாளர்,
கிழக்கிலங்கைக் கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.

6–222—11.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,910

---

# பொருட்கள் விற்பனையும் பிறவும்

## பொலிஸ் பகுதி

### பாவிப்பால் தவிர்க்கப்பட்ட பொருட்களின் விற்பனை

பின்வரும் பழைய பொருட்கள் கொழும்பு நாராகென்பிட்டிய பொலிஸ் நிலையத்தில் உள்ள பொருட்சாலையில் 1970 ம் ஆண்டு ஆனி மாதம் 24 ம் தேதி முற்பகல் 9.30 மணிக்கு ஏலத்தில் விற்கப்படும்.

1. காக்கி உடைகள்
2. தொப்பிகள்
3. பாத அணிகள்
4. நீண்டபாத அணிகள்
5. மழை அங்கிகள்
6. உடை கம்பளங்கள்
7. உடை பெட்டிகள்
8. கன்வஸ் பாத அணிகள்
9. தட்டச்சுகள்
10. தளபாடங்கள்
11. வெற்றுப் பீப்பாக்கள்
12. தோல் பட்டிகள்
13. பிற்ற் தொப்பிகள்
14. (கப்) தொப்பிகள் (CAP)
15. மெத்தைகள்
16. நீல கால் மேசுகள்
17. அலுமினியம் காற்ருடிகள்
18. பெற்ரோல் மக்ஸ் விளக்குகள்
19. அரிக்கன் லாம்புகள்
20. பைசிக்கிள் வண்டிகள் ஆதிய

வீ. ஆர். டேல்,
குற்றப்பிரிவுப் பொலிஸ் அதிகாரி,
கொழும்பு.

பொலிஸ் காரியாலயம்,
கொழும்பு,

6-158—11.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,910

### அரசாங்க விநியோகத் திணைக்களம்

1970 ம் ஆண்டு யூன் மாதம் 22 ம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் கொழும்பு 2, சேர் சிற்றம்பலம் கார்டினர் மாவத்தை யிலுள்ள அரசாங்க விநியோகத் திணைக்களத்தில், நல்ல முறையில் பாவிக்கப்பட்ட 20 மோட்டார் வாகனங்கள் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும். வாகனங்களை மேற்குறிப்பிட்ட நிலையத்தில், அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

மேலதிக விபரங்களை அரசாங்க விநியோகத் திணைக்களப் பணிப்பாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

எஸ். ஏ. பீ. ரூபசிங்க,
அரசாங்க விநியோகத் திணைக்களப் பணிப்பாளர்.

கொழும்பு,
1970 ம் ஆண்டு யூன் மீ 11 ந வ.

6–203—11.6.70 ந திகதிய வர்த்தமானி இல. 14,910

---

### சிவில் விமானப் போக்குவரத்துத் திணைக்களம்

#### உபயோகமற்ற பொருட்களின் பிரசித்த ஏலவிற்பனை

1970 ம் ஆண்டு ஜூலை மாதம் 2 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு காங்கேசன்துறையிலுள்ள ஆகாய விமான நிலையத்தில் சில உபயோக மற்ற பொருட்களின் பிரசித்த ஏல விற்பனை நடைபெறும்.

இப்பொருட்களை விற்பனை நாளன்று முற்பகல் 9 மணி தொடக்கம் பார்வையிடலாம். விற்பனைக்குரிய பொருட்களின் நிரலை கொழும்பு 1, தபால் பெட்டி எண் 535 இல் உள்ள சிவில் விமானப் போக்குவரத்து அதிபரிடமிருந்தும் காங்கேசன்துறை விமான நிலைய அதிகாரியிட மிருந்தும் விண்ணப்பமூலம் பெற்றுக் கொள்ளலாம்.

ஏலத்தில் வாங்கப்படும் பொருட்களுக்குரிய பணத்தை உடனே அவ்விட விடத்தில் கொடுப்பதுடன், அப்பொருட்களை அன்று பிற்பகல் 1.00 மணிக்கு முன்னதாக எடுத்துச் செல்லுதல் வேண்டும்.

டபிள்யூ. எல். பி. டி. மெல்,
சிவில் விமானப் போக்குவரத்து அதிபர்.

கொழும்பு 1,
1970 ஜூன் 2.

6–267—11.6.70 ந திகதிய வர்த்தமானி இல. 14,910

---

## ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும்

### கள்ளுத்தவறணைக் குத்தகை விற்பனை

#### குருநாகல் மாவட்டம்—1970/71

14,898 இலக்கம் கொண்ட 1970 ம் ஆண்டு மார்ச் மாதம் 20 ந திகதிய இலங்கை அரசாங்க வர்த்தமானியில் மதுபான அதிபரால் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் கள்ளு விற்பனைப் பிரகாரம் அனுமதிப்பத்திரங்களில் பொது நிபந்தனைகளுக்கமையும் கீழ் குறிக்கப்பட்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள கள்ளுத்தவறணைகளில் 1970 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 1 ந திகதி தொடக்கம் 1970 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ந திகதி வரை கள்ளு சில்லறையாக தவறணைகளில் விற்பனை செய்வதற்கு குருநாக்கல் மாவட்ட அரசாங்க அதிபர் 1970 ம் ஆண்டு ஜூலை மாதம் 6 ந திகதி வரை கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்வார்.

2. கள்ளுக்குத்தகை எடுக்க விரும்பும் விண்ணப்பக்காரர்கள் குறிக்கப்பட்ட பத்திரங்களில் கேள்விகளை அனுப்புதல் வேண்டும். மேற்படி தேவையான பத்திரங்களை எக்கச்சேரியிலாவது பெற்றுக் கொள்ளலாம். குறிக்கப்பட்ட தொகையை வைப்புத் தொகைப்பணமாக கச்சேரியில் கட்டிய தற்கு கச்சேரிப் பற்றுச் சீட்டையும் தங்களின் பெறுமதிப் பத்திரங்களையும் முறையாகக் கேள்விப் பத்திரங்களுடன் மெழுகிடப்பட்ட உறையிலிட்டு உறையின் மேல் இடதுபக்கத்தில் கள்ளுத்தவறணையின் பெயரும் இலக்கமும் எழுதி குறிக்கப்பட்ட திகதிக்கு முன் குருநாக்கல் கச்சேரியிலிருக்கும் தபாற் பெட்டியில் அல்லது பதிவு செய்யப்பட்ட தபாலில் குருநாக்கல் அரசாங்க அதிபர் அவர்களுக்கு கிடைக்குமாறு அனுப்பப்படல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்களில் திருத்தங்கள் ஏதும் இருப்பின் அவைகளை விண்ணப்பக்காரர் கையொப்பமிட்டு அனுப்புதல் வேண்டும். இல்லாவிட்டால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

4. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியாகிய 1970 ம் ஆண்டு ஜூலை மாதம் 6 ந திகதி காலை 9.00 மணிக்கு விண்ணப்பக் காரர்கள் இக்கச்சேரியில் சமூகமளிக்க வேண்டும்.

5. விண்ணப்பக்காரர்களின் கேள்விப்பத்திரங்களை அரசாங்க அதிபர் அவர்களின் விருப்பப்படி குறிப்புக் கூறாமல் ரத்துச் செய்யப்படும்.

6. சித்தியெய்திய விண்ணப்பக்காரர் பிரத்தியேக உரிமையாளர் எனப் பிரகடனப்படுத்தப்பட்டவுடன் குருநாக்கல் மாவட்ட அரசாங்க அதிபர் குறிக்கப்படும் 2 மாதக் குத்தகைக் காசை உத்தரவாத வைப்புப் பணமாக உரிமையாளர் என பிரகடனப்படுத்தப்பட்ட 6 ந தேதியில் பிற்பகல் 4 மணிக்குப் பிந்தாமல் செலுத்தவேண்டும். மேலும் விண்ணப்பக்காரர் கள்ளுக்குத்தகை விற்பனவு நிபந்தனைகளடங்கிய அட்டவணையில் கைச்சாத்திடவேண்டும்.

7. 14,898 இல. கொண்ட 1970 ம் ஆண்டு மார்ச் மாதம் 20 ந திகதிய இலங்கை வர்த்தமானியில் மதுபான அதிபரால் பிரசுரிக்கப்பட்ட கள்ளுக்குத்தகை விற்பனை நிபந்தனைகளுக்கமைய கேள்விப்பத்திரங்கள் அனுப்புவதில் விசேட கவனம் செலுத்தவேண்டும். மேலதிக விபரங்களுக்கு குருநாக்கல் கச்சேரிக்கு விண்ணப்பிக்கவும்.

கச்சேரி, குருநாக்கல்,
11.6.1970.

எச். பி. திசாநாயக,
குருநாகல் மாவட்ட அரசாங்க அதிபர்.

#### அட்டவணை

#### அனுமதிக்கப்பட்ட கள்ளுத்தவறணைகள் 1970/71—குருநாக்கல் மாவட்டம்

| இலக்கமும் பெயரும் | | பகுதி | கிராம எல்லைகள் | திறக்கும் நேரம் காலை | மூடும் நேரம் மாலை |
|---|---|---|---|---|---|
| 1. | கிரிஉல்ல | கடுகம்பொலஹத்பத்து | மல்கமுவ கிராம எல்லைக்குள் | 8.00 | 7.00 |
| 2. | உடுபத்தாவ | ஷை | உடுபத்தாவ கிராம எல்லைக்குள் | 8.00 | 7.00 |
| 4. | நாரம்மல | தம்பதெனிஹத்பத்து | நாரம்மல கிராம எல்லைக்குள் | 8.00 | 7.00 |
| 5. | கடுபிடிய | வேயூடவில்லிஹத்பத்து | கடுபிடிய கிராம எல்லைக்குள் | 8.00 | 7.00 |
| 6. | குருநாக்கல் | குருநாக்கல் மாநகர எல்லைக்குள் | 1 ம், 9 ம், 10 ம், 11 ம், 12 ம் வட்டாரத்துக்குள் | 8.00 | 8.00 |

#### குத்தகைப் பணமும், நேரங்களும் கேள்விப்பத்திரங்கள் மூடப்படும் நேரமும்

| இலக்கமும் பெயரும் | | வைப்புப்பணம் ரூ. | ச. | கேள்விப்பத்திரங்கள் மூடப்படும் நேரம் |
|---|---|---|---|---|
| 1. | கிரிஉல்ல | 2,000 | 0 | காலை 9.30 |
| 2. | உடுபத்தாவ | 1,000 | 0 | காலை 10.00 |
| 4. | நாரம்மல | 2,000 | 0 | காலை 10.30 |
| 5. | கடுபிடிய | 1,000 | 0 | காலை 11.00 |
| 6. | குருநாக்கல் | 5,000 | 0 | காலை 11.30 |

6–243—11.6.70 ந திகதிய வர்த்தமானி இல. 14,910

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறைநாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதிநாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கவிரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500 செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

**அட்டவணை— 1970**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| யூன் | .. | 5. 6.70 | வெள்ளி | .. | 29. 5.70 | வெள்ளி | .. | பி.ப. 3.30 |
| | | 11. 6.70 | வியாழன் | .. | 5. 6.70 | வெள்ளி | .. | பி.ப. 3.30 |
| | | 18. 6.70 | வியாழன் | .. | 11. 6.70 | வியாழன் | .. | ந.ப. 12.00 |
| | | 25. 6.70 | வியாழன் | .. | 18. 6.70 | வியாழன் | .. | ந.ப. 12.00 |
| யூலை | .. | 2. 7.70 | வியாழன் | .. | 25. 6.70 | வியாழன் | .. | ந.ப. 12.00 |
| | | 10. 7.70 | வெள்ளி | .. | 2. 7.70 | வியாழன் | .. | ந.ப. 12 00 |
| | | 17. 7.70 | வெள்ளி | .. | 10. 7.70 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| | | 24. 7.70 | வெள்ளி | .. | 17. 7.70 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| | | 31. 7.70 | வெள்ளி | .. | 24. 7.70 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| ஓகத்து | .. | 7. 8.70 | வெள்ளி | .. | 30. 7.70 | வியாழன் | .. | பி.ப. 3.30 |
| | | 14. 8.70 | வெள்ளி | .. | 7. 8.70 | வெள்ளி | .. | பி.ப. 3.30 |
| | | 21. 8.70 | வெள்ளி | .. | 14. 8.70 | வெள்ளி | .. | பி.ப. 3.30 |
| | | 28. 8.70 | வெள்ளி | .. | 21. 8.70 | வெள்ளி | .. | பி.ப. 3.30 |
| செத்தெம்பர் | .. | 4. 9.70 | வெள்ளி | .. | 28. 8.70 | வெள்ளி | .. | பி.ப. 3.30 |
| | | 11. 9.70 | வெள்ளி | .. | 4. 9.70 | வெள்ளி | .. | பி.ப. 3.30 |
| | | 18. 9.70 | வெள்ளி | .. | 11. 9.70 | வெள்ளி | .. | பி.ப. 3.30 |
| | | 25. 9.70 | வெள்ளி | .. | 18. 9.70 | வெள்ளி | .. | பி.ப. 3.30 |
| ஒற்ரோபர் | .. | 2.10.70 | வெள்ளி | .. | 25. 9.70 | வெள்ளி | .. | பி.ப. 3.30 |
| | | 9.10.70 | வெள்ளி | .. | 2.10.70 | வெள்ளி | .. | பி.ப. 3.30 |
| | | 16.10.70 | வெள்ளி | .. | 9.10.70 | வெள்ளி | .. | பி.ப. 3.30 |
| | | 23.10.70 | வெள்ளி | .. | 16.10.70 | வெள்ளி | .. | பி.ப. 3.30 |
| | | 30.10.70 | வெள்ளி | .. | 23.10.70 | வெள்ளி | .. | பி.ப. 3.30 |
| நவெம்பர் | .. | 5.11.70 | வியாழன் | .. | 30.10.70 | வெள்ளி | .. | பி.ப. 3.30 |
| | | 12.11.70 | வியாழன் | .. | 5.11.70 | வியாழன் | .. | ந.ப. 12.00 |
| | | 20.11.70 | வெள்ளி | .. | 12.11.70 | வியாழன் | .. | ந.ப. 12.00 |
| | | 27.11.70 | வெள்ளி | .. | 20.11.70 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| திசெம்பர் | .. | 4.12.70 | வெள்ளி | .. | 27.11.70 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| | | 11.12.70 | வெள்ளி | .. | 4.12.70 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| | | 18.12.70 | வெள்ளி | .. | 10.12.70 | வியாழன் | .. | பி.ப. 3.30 |
| | | 24.12.70 | வியாழன் | .. | 17.12.70 | வியாழன் | .. | பி.ப. 3.30 |
| | | 31.12.70 | வியாழன் | .. | 24.12.70 | வியாழன் | .. | பி.ப. 3.30 |

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1970 ஆம் ௵ மார்ச்சு ௴ 5 ஆந் உ.

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
**அரசாங்க அழுத்தகன்.**

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது.